வைத்திய கலாநிதி

THE VAIDYA KALANIDHI

EDITOR
Pandit M. Duraiswami Aiyangar
Ayurveda Bhushan

பத்திராதிபர்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷண

புஸ்தகம் 1. Vol. 1. | ப்ரமாதீச ஹூ மார்கழி மீ —JANUARY—1914. | ஸஞ்சிகை 5. No. 5.

THE AGASTYAR SYSTEM OF MEDICINE.

அகஸ்திய வைத்திய முறை.

BY

VAIDYARATNA

PANDIT D. GOPALACHARLU, A. V. S.,

Ayurvedamarthanda and Bhishangmani.

தமிழ்நாட்டில் அகஸ்தியவைத்தியம் என்று ஒரு வகையான சிகித்ஸா முறை வழங்கப்பட்டு வ[illegible]. இது ஆர்ஷம், தாந்த்ரிகம் * [illegible] இரண்டு வித முறைகளும் கலந்ததாகக் காணப்படுகிறது.

ஆர்யர்களுடைய தாந்த்ரிக முறைகளைப் போலவே இவ்வகஸ்திய முறையிலும் சிவன் பார்வதிக்கு வைத்திய சாஸ்திர தத்துவங்களை முதலில் உபதேசித்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது; பிறகு பார்வதியானவள் நந்திகேச்வரனுக்கும், நந்திகேச்வரர் அச்வினிதேவதைகளுக்கும், அவர்கள் விச்வேதேவர்களுக்கும், விச்வேதேவர் தன்வந்தரிக்கும், தன்வந்தரி அகஸ்தியருக்கும், அகஸ்தியர் புலஸ்தியருக்கும், புலஸ்தியர் தேரையருக்கும், தேரையர் யூகமுனிக்கும் இந்த தந்திரத்தை முறையே உபதேசித்ததாகவும் தெரியவருகிறது.

இந்த உபதேசபரம்பரையும் ஒவ்வொரு கிரந்தத்தில் ஒவ்வொரு விதமாக சிறிது வித்தியாஸப்படுகிறது. அகஸ்தியவைத்திய முறைக்கு பிரவர்த்தகர்களாயிருந்தவர்கள் பதினெண் ஸித்தர்கள் என்றும், ஸம்ஸ்கிருத தாந்த்ரிக நூல்களில் பிரஸித்தமாகக் கூறப்பட்டிருக்கும் அகஸ்தியர், நந்திகேச்வரர், தன்வந்தரி முதலிய ஸித்தர்கள்மாத்திரமின்றி சட்டமுனி, புசுண்டர், கருவூரார், தேரையர், திருமூலர், போகர், கொங்கணர், இடைக்காட்டார் முதலான வேறு சில ஸித்தர் உண்டென்றும், இச்சட்டமுனி முதலியோர் ஸம்ஸ்கிருதமறியாத தமிழ்யோகிகள் என்றும் அறிகிறோம். இவ்வைத்தியமுறைக்கும் பிரவர்த்தகர்கள் நாற்பத்தெட்டு ஸித்தர்கள் என்று சிலரும், இருபத்தொன்று என வேறு சிலரும் கூறுகின்றனர். ஆனால், பதினெட்டு ஸித்தர்களே முக்கியமானவர் என்று அனே

* ஆதியில் சரகஸுச்ருதாதி மஹர்ஷிகள் இயற்றிய வைத்திய நூல்களில் கேவலம் மூலிகைகள் அல்லது ஓஷதிகளைக் கொண்டே ஔஷத முறைகள் கூறப்படுவதால், அவ்விதம் மூலிகைகளையே பிரதானமாகக் கொண்ட வைத்திய முறை 'ஆர்ஷம்' என்றும், பிறகு நாகார்ஜுனன் முதலிய ஸித்தர்களால் இயற்றப்பட்ட 'தந்திரங்கள்' என்கிற வைத்திய கிரந்தங்களில் பெரும்பாலும் இரஸவர்க்கங்களும் லோஹவர்க்கங்களுமே ஔஷத முறைகளில் உபயோகிக்கப்பட்டதால் அவ்வித சிகித்ஸா முறை 'தாந்த்ரிகம்' என்றும் கூறப்படும்.

வரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஸித்தர்களில் சிலர் ஆர்ஷஸம்பிரதாயத்தை அநுஸரித்து நூல்கள் இயற்றியதால், அவர்கள் வடதேசத்திய முறையைப் பின்பற்றியவர் என்றும், வேறு சிலர் பிரத்தியேகமாய் தென் தேசத்தில் மற்றொரு வித வைத்திய முறையை சில நூல்களியற்றிக் கற்பித்ததால் அவர்கள் தென் தேசத்திய ஸம்பிரதாயிகள் என்றும் வியவஹாரிக்கப்பட்டனர். இவ்விதம் வைத்திய முறையில் சில வகுப்புகள் ஏற்பட்டதால், ஆர்ஷ வைத்திய முறையைத் தவிர்த்து தென் தேசத்திய முறை யென்று வேறொரு வைத்திய தந்திரம் உண்டென்றும், அதுவே இத்தேசத்திய தாந்த்ரிக சிகித்ஸா முறை என்றும் கூறப்படுவதாய் தெரிய வருகிறது.

தென்தேசத்தில் அகஸ்தியமஹர்ஷியானவர் ஸ்ரீராமன் வருவதற்கு முன்னமே வாஸம் செய்து வந்ததானது அனைவரும் அறிந்த விஷயம். அப்பொழுது அவ்விடத்தில் எவ்விதமான வைத்திய முறைகள் வழங்கப்பட்டு வந்ததோ தெரியவில்லை. ஆனால், அகஸ்தியமஹர்ஷியானவர் ஆர்ஷவைத்திய முறையைப் பின் பற்றி வைத்திய நூல் இயற்றியவரென்று ஸம்ஸ்கிருத ஆயுர்வேத கிரந்தங்களில் விசதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அகஸ்தியர் தென்தேசத்திற்கு வந்தபோது அவ்விடத்திய ஜனங்களுக்கு விசேஷமான சில அரிய வைத்திய சாஸ்திரங்களை உபதேசித்ததாலேயோ, அல்லது அங்குள்ளவர் வழங்கி வந்த வைத்தியமுறைகளை ஒருவாறு சீர்திருத்தியதாலேயோ, அல்லது ஏதோ வேறு காரணத்தினாலேயோ இந்த முறைக்கு 'அகஸ்திய வைத்திய முறை' என்ற பிரஸித்தி யுண்டாயிற்றென்று நினைக்கிறேன்.

இந்த முறையைப் பின்பற்றியவர்களால் அநேகம் வைத்திய நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவற்றுள் தேரையர் எழுதிய கிரந்தங்கள் மிகவும் பிராசீனங்களென்று அறியப்படுகிறது. சில ஸித்தர்கள் ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேதக்கிரந்தங்களைத் தமிழில் அவ்விதமே எழுதி, அவற்றிலிருப்பது போலவே தைலம், லேஹ்யம், கஷாயம் முதலிய ஔஷத முறைகளை நிரூபித்திருக்கின்றனர். தாந்த்ரிக முறைகள் மட்டும் தமிழ் தேசத்திய பிரத்தியேகமான ஒருவித ஸம்பிரதாயத்தைக்கொண்டே இயற்றப்பட்டவைகளாகும். வடமொழியில் தாந்த்ரிக வைத்திய ப்ரவர்த்தகர்களான ஸோமநாதஸித்தர்முதலியவர்களால் 'ரஸார்ணவம்' முதலிய கிரந்தங்களில் வழங்கப்பட்டுள்ள வைத்தியபரிபாஷைகள் தமிழ் வைத்திய நூல்களில் காணப்படவில்லை. லோஹங்களையும் தாது வர்க்கங்களையும் கொண்டு செய்யப்படும் பஸ்மம், ஸிந்தூரம், திராவகம் முதலிய பற்பல முறைகள் வடமொழியிலுள்ள இரஸசாஸ்திர ஸம்பிரதாயங்களை விட வேறுபட்டவைகளாயிருக்கின்றன. தமிழ் முறைகளின்படி லோஹம் முதலியவற்றை பஸ்ம ஸிந்தூராதிகளாக எளிதில் செய்து விடலாம்.

ஜயநீர்:—சில க்ஷாரங்கள், உப்புகள் இவற்றைப் பாதாளயந்திரத்தின் * உதவியால் பூமிக்குள் சில காலம் அடக்கப் பண்ணி வைத்து ஒருவித திராவகம் செய்வதுண்டு. இதனால் இறக்கப்படும் திராவகத்திற்கு 'ஜயநீர்' என்று பெயர் வழங்கப்படுகிறது. இந்த

* பன்னிரண்டு அங்குல விஸ்தீர்ணமும் ஆழமுமுள்ள செட்டியான பள்ளத்தில், நான்கு அங்குல விஸ்தாரமும் ஆழமுமுள்ள மற்றொரு சிறிய பள்ளமும் தோண்டி, அதில் ஒரு துருத்தியின் முனையைச்செலுத்தி, அதன்மேல் மரக்கரிகளைப் பரப்பி, ஒரு பாத்திரத்தை அதன்மேல் வைத்து, அதற்குள் எதிலிருந்து திராவகம் இறக்க வேணுமோ அப்பதார்த்தத்தையும் போட்டு, மற்றொரு பாண்டத்தினால் சுற்றிலும் கவரும்படி அடியிலுள்ள பாத்திரத்தையும் மூடி, கீழே அக்னியிட்டு துருத்தியைக் கொண்டு ஊதி திராவகம் இறக்குவதற்குத் தகுந்ததாய் ஏற்படுத்தப்படும் இயந்திரமானது 'பாதாள யந்திரம்' எனப்படும்.

யுநீரைக் கொண்டு கௌரிபாஷாணம், லிங்கபாஷாணம் முதலியவற்றிற்கு ஒரு விதமாக் கறுக்குக் கொடுப்பதுவும், அதனால் அவ்வித இரஸவர்க்கங்கள் அக்னியில் பறந்து போகாமலிருக்குமாறு அவற்றைக் கட்டுவதும் வாடிக்கை. ஐயநீரால் பக்குவம் செய்யப்பட்ட பாஷாணம் முதலியவற்றை தேன்முதலான வற்றோடு அநுபானமாகக் கலந்து வாதரோகம் ஸந்நிபாதம் முதலிய தீவ்ரமான ரோகங்களில் உபயோகித்து வருகின்றனர்.

வடமொழியிலுள்ள ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டபடி அப்ரகத்தை நூற்றுக் கணக்கான புடங்களில் எரித்தாலன்றி, அதிலுள்ள சந்த்ரிகை யென்கிற மினு மினுப்புகள் போகமாட்டா; ஆனால், அகஸ்திய ஸம்பிரதாயத்தை அநுஸரித்து நாய்ப்புணக்கியிலையின் சாறுத்தில் தாந்யாப்ரகத்தை * அரைத்து, பத்து அல்லது பன்னிரண்டு முறை புடம் போட, சந்த்ரிகையே இல்லாமல் சுத்த பஸ்மமாக ஆய் விடுகிறது. இவ்விதம் பக்குவம் செய்யப்படும் அப்ரக பஸ்மத்திற்கு வீர்யமும் அதிகமாயிருப்பதாகத் தெரியவருகிறது.

நீருபஸ்மம்:—பற்பல மூலிகைகளைச் சேர்த்து மயில் துத்தத்தை வித்யாதர யந்திரத்தில் ‡ பக்குவம் பண்ணி மிகவும் வெண்மையான பஸ்மம் ஒன்று செய்யப்படுவதுண்டு. இது 'நீருபஸ்மம்' என்று வழங்கப்படுகிறது. அகஸ்தியஸம்பிரதாயக் காரர்கள் கட்டு மருந்து என்றும் சொல்லுகிறார்கள் இதை

* அப்ரகத்தை நன்கு சூர்ணம் செய்து, சிணையுள்ள நெல்லுடன் கலந்து துணியில் கட்டி ஏதேனும் புளிப்பான நீரில் அலிசுகையில், வஸ்திரத்தின் த்வாரங்களால் நீரில் படியும் வெகு மெல்லிய அப்ரகப் பொடியானது 'தாந்யாப்ரகம்' எனப்படும்.

‡ பஸ்மம் செய்யவேண்டிய பதார்த்தத்தை ஒரு பாத்திரத்திலிட்டு, அதே மாதிரியான மற்றொரு பாத்திரத்தை அதன்மேல் மூடி, நாலு பக்கங்களிலும் எரித்தல் போட்டு பஸ்மம் முதலியது செய்வதற்கு உபயோகிக்கப்படும் இயந்திரத்தை 'வித்யாதர யந்திரம்' என்பார்கள்.

மிகவும் சிறிய அளவில் ஒன்று அல்லது இரண்டு வேளைக்குமேல் உபயோகிப்பதில்லை. இவ்விதம் மிகவும் சிறந்த நூற்றுக் கணக்கான முறைகள் அகஸ்தியவைத்தியரீதியாய் உண்டு. இவ்விதமாய் தமிழ் முறையை அநுஸரித்த சிகித்ஸாகிரமங்கள் தென்தேசத்திலும், ஸிம்ஹளத்வீபம் என்கிற இலங்கையிலும், சிங்கப்பூரிலும், பர்மாவிலும் இப்பவும் வழங்கப்பட்டு வருகின்றன. பௌத்த மதஸ்தர்கள் அரசாண்ட காலத்தில் இந்த வைத்திய முறை இவ்விதமாக வியாபித்ததாய் அறிகிறோம்.

இந்த ஸம்பிரதாயத்திற்கு மூல புருஷரான அகஸ்தியரால் ஆயுர்வேத ஸூத்திரங்களுக்கு பாஷ்யமும் எழுதப்பட்டதாகக் கேள்விப் படுகிறோம். அகஸ்தியர் ஆயுர்வேதம் 1200; இது பன்னீராயிரம் கிரந்தங்கள் * அடங்கியதாகும். இந்த நூலில் இத்தேசத்தில் உண்டாகக் கூடியவையும், ஸம்ஸ்கிருத நிகண்டுக்களில் கூறப்படுபவையுமான அனேக ஔஷதிகளின் குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. அகஸ்தியர்வைத்தியம் அறுநூறு. அகஸ்தியர் பரிபூர்ணம் நானூறு. அகஸ்தியர்வைத்திய காவியம் ஆயிரத்தைந்நூறு. அகஸ்தியர் சித்தூரம் முன்னூறு. இந்நூல்களெல்லாம் தமிழ் வைத்திய முறையில் சிறந்தவையாம். ஆர்ஷ மென்கிற ஆயுர்வேத முறைகளை அநுஸரித்தும் இவர் சில கிரந்தங்கள் செய்திருப்பதாகக் கேள்வி. புலிப்பாணி ஐந்நூறு. போகர் எழுநூறு. யூக முனி ஆயிரம். உரோமருஷி ஐந்நூறு. என்கிற சில கிரந்தங்கள் வேறு பல மஹான்களாலும் இயற்றப்பட்டிருக்கின்றன. ஆயுர்வேத ஸூத்திரங்களுக்கு வியாக்கியானம் வரைந்த [illegible] தாரும் தமிழ் வைத்திய முறைப்படி [illegible] இயற்றிய

* வடமொழியில் [illegible] எழுத்துகள் அடங்கியது ஒரு கிரந்தம் என்று சொல்லப்படு[illegible]

வித்தர்களில் ஒருவர் என்று தெரியவருகிறது. தமிழில் இவ்விதமான பண்டைக் காலத்திய வைத்திய நூல்கள் ஆங்காங்கு புதிது புதிதாக வெளியாய் வருகின்றன.

தன்வந்தரி, அகஸ்தியர் முதலானவர்கள் அகஸ்திய வைத்திய ஸம்பிரதாயத்திற்கு பிரவர்த்தகர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களே ஆர்ஷ வைத்திய பிரவர்த்தகர்களாகவும் ஆகிறார்கள். ஆனால் இவ்விஷயங்களை நன்கு விளக்குவதற்கேற்ற சரித்திரங்கள் கிடைக்கவில்லையாகையால், மேற் கூறியவர்களில் அல்லது அவர்களுடைய நூல்களில் முந்தியவை பிந்தியவை என்கிற விசாரம் ஸாத்தியமானதல்ல. இதில் சிறந்த வைத்திய ஸம்பிரதாயப்படி இயற்றப்பட்ட கிரந்தங்கள் மிகவும் துர்லபமாயிருப்பதாலும், கிடைக்கக் கூடிய கிரந்தங்கள் கேவலம் புதிர் போன்ற மிகவும் சிக்கான ஸங்கேத வாக்கியங்களும் உவமை முதலிய பற்பல அலங்காரங்களும் அடங்கியவைகளாகக் காணப்படுவதாலும், முன் பின் விரோதமில்லாமல் விஷய விசாரம் செய்வதற்கேற்ற ஸம்பிரதாய வித்தமான அறிவிற் சிறந்த ஞானிகள் அரிதாயிருப்பதாலும், இந்நூல்களில் கூறப்படும் விஷயங்களையும் அவ்விஷயங்களுக்குள்ள பரஸ்பர ஒற்றுமை அல்லது வேற்றுமைகளையும் பற்றிய முறைகளை விமர்சனம் செய்வதும் மிகக் கடினம். ஆகிலும், எமது புத்திக்கு எட்டியவரையில் தமிழ் வைத்திய நூல்களை ஆராய்ச்சி செய்ததாலும், அவ்வைத்திய முறைகளைக் கையாளும் வைத்தியர்களுடைய அபிப்பிராயங்களைக் கொண்டும், தாந்திரிக சிகித்ஸா முறைகளைப் பார்க்கினும் அகஸ்திய வைத்திய முறை அநேக விதத்தில் வேறுபட்டதாகவே தோன்றுகிறது. அகஸ்தியவைத்திய ஸம்பந்தமான கிரந்தங்களிலுள்ள பாரிபாஷிகமான பிரயோகங்கள் தாந்த்ரிக கிரந்தங்களில் காணப்படாமலிருப்பதே இதற்குப் போதுமான பிரமாணமாகும்.

வெகு நாட்களாகவே தமிழ்ப் பாஷையானது அபிவிருத்தியடைந்து வந்தது. இதற்காக சில ஸங்கங்களும் இருந்தன. இப்பாஷையில் அநேக வேதாந்த கிரந்தங்களும் உண்டு.- தென்னிந்தியாவில் வியவஹரிக்கப்படும் ஆந்திர-கர்நாட-திராவிட பாஷைகளுள் இத் தமிழ்ப்பாஷை ஒன்றுதான் ஸம்ஸ்கிருத பாஷையின் உதவியின்றியே பெரும்பாலு[ம்] சுதந்திரமான ஒரு மாத்ரு பாஷையாக இருக்கின்றதென்று சரித்திரக் காரர்கள் எழுதியிருக்கின்றனர். இவ்விதம் சுதந்திர பாஷையான இதில் பிரத்தியேகமாய் பல வைத்திய நூல்கள் ஏற்பட்டிருப்பதால், அவை எல்லாவற்றினுடையவும் வாஸ்தவார்த்தங்களை ஆதிமே[illegible]டந்தமாய் ஆராய்ச்சி செய்யாமல் இவ்வைத்திய முறையில் ஒரு வித முடிவான அபிப்பிராயம் கூறுவது ஸாத்தியமில்லாத விஷயமாகும்.

INFECTIOUS DISEASES.

தொற்று வியாதிகள்.

BY

Dr. A. LAKSHMI PATHI B.A., M.B. & C.M.,

Physician, Surgeon and Editor of

Vijnana chandrika Series.

மஸூரிகா ரோகம், காலரா என்னும் விஷூசிரோகம், குளிர்க்காய்ச்சல், குஷ்டம் முதலிய வியாதிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் தொற்றிக்கொள்ளுமென்று நாம் அனைவரும் ஸாதாரணமாய் கேள்விப்பட்டு வருகிறோம். அம்மை, விஷூசி முதலியவை மிக வேகமாய் வந்து, ஒருவரிடமிருந்து மற்றவரிடம் அவ்விதமே வேகமாய்ப் பரவுவதாகவும் நாம் அறிவோம். வேறு சில வியாதிகள் இவற்றைவிட தீவ்ரத்தன்மையில் குன்றியவைக

ளாய், சுற்றிலுமுள்ள அனைவரிடமும் ஸம்பந்
தித்காமல், சிலஸமயத்தில் சிலரிடம் மட்டும் பற்
றிக்கொள்ளுந் தன்மையுடையவைகளா யிருக்
கின்றன. வீட்டில் ஒருவனுக்கு க்ஷயவியாதி
யாவது குஷ்டமாவது உண்டாயிருந்தால், அவ்
வியாதி அவ்வீட்டில் அனைவருக்கும் உண்டாவ
தாகக் காணப்படவில்லை. என்ன காரணத்தி
னால் இவ்வாறு சில வியாதிகள் ஒரே இடத்
தில் சிலரை விலக்கிவிட்டு மற்றவர்களைப் பிடிக்
கின்றனவோ அதை பிறகு குறிப்பிடுவோம்.
இவ்விதம் ஒரு வியாதி ஒருவரிடமிருந்து வேறு
சிலரிடம் தொற்றுமலிருப்பதைக் கண்டு, அவற்
றுக்கு ஒட்டுந்தன்மை உண்டோ இல்லையோ
வென்று சிலர் ஸந்தேஹப்படக்கூடும்.

விஷூசி முதலிய சில வியாதிகள் பிறரிடம்
ஸம்பந்தித்த பிறகு, சில நிமிஷங்களுக்குள்
ளேயே அவற்றின் குறிகளைக் காட்டத்தொடங்
கும். க்ஷயம் முதலிய வேறு சில ரோகங்கள்
தொற்றிக்கொண்டபின், அவற்றின் குறிகள்
வெளியில் தெரிவதற்கு ஒவ்வொரு ஸமயம்
சில வருஷங்களும் செல்லும். இவ்வித கார
ணங்களைக்கொண்டும் இவை தொற்று வியாதி
கள் என்று ஜனங்கள் நன்கு தெரிந்துகொள்
வதற்கு வகையில்லை.

ஸர்வவித தொற்றுவியாதிகளுக்கும் பொது
இலக்ஷணங்கள் அதாவது போலிக்குறி
சில உண்டு. ஆராய்ச்சி செய்பவர், இவற்
றைக்கொண்டு எவை தொற்று வியாதிகள்,
எவை தொற்று வியாதிகளல்ல என்பதை அறி
யக்கூடியவரா யிருக்கின்றனர். தொற்று வியா
திகளைப் பரவச்செய்யும் பீஜங்கள் செடிகளின்
வித்துகளைப்போலவே இருக்கும். கடலையி
லிருந்து முளைகள் மறுநாளே முளைத்துவிடும்.
பனமரத்தின் வித்திலிருந்து முளைகள் அனேக
நாளின்றி சீக்கிரம் வெளிவராது. இப்படியே
தொற்று வியாதிகளின் வித்துகள் நமது சரீ
ரத்தினுள் பிரவேசித்த பிறகு, அவற்றின் ஜாதி
பேதங்களை அனுஸரித்து அந்தந்த வியாதி
வெளிப்படுவதற்கு வெவ்வேறு விதமாக
காலமும் வித்தியாஸப்படும். தொற்றுவியா
திகளெல்லாவற்றிலும் ஒவ்வொரு வியாதியை
உண்டுபண்ணுவதற்கு ஒவ்வொரு விதமான
வித்து ஏற்பட்டிருக்கின்றது. விருக்ஷங்களில்
வேப்பமரம், அரசமரம், புளியமரம் முதலிய
ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஒவ்வொரு
வகையானவித்து ஏற்பட்டு அதனதன் வித்து அந்
தந்த மரங்களையே உண்டுபண்ணுவதுபோல்,
தொற்று வியாதிகளும் அவ்வவற்றின் வித்து
களின் மூலமாய் விருத்தியாகின்றன. ஒரு வியா
தியை உண்டாக்கும் பீஜமானது ஒரு ரோகியி
னிடம் வளர்ந்து, பிறகு கூறப்படும் விதமாய்
ஏதோ ஒரு வகையில் மற்றொரு மனிதனு
டைய தேஹத்தில் சேர்ந்து அவ்விடத்தில்
வளரத்தொடங்கி மீண்டும் அதே வியாதியை
உண்டாக்கும்; என்றால் விஷூசி ரோகத்
தினால் வருந்தும் மனிதனுடைய தேஹ
த்திலிருந்து உண்டான வித்துகள் மற்றொரு
மனிதனுடைய தேஹத்தில் சேர்ந்து விஷூசி
யையே உண்டுபண்ணும். இவ்விதமே மஸூரி
கையின் வித்துகள் மஸூரிகை யென்கிற அம்
மையையே உண்டுபண்ணுமல்லாமல் மற்றொரு
ரோகத்தை உண்டுபண்ணாது.

மேற்கூறிய தொற்றுவியாதிகளை யுண்டு
பண்ணும் வித்துகள் மிகவும் ஸூக்ஷ்மமான
வையாதலால், அவற்றை ஸூக்ஷ்மஜீவன்கள்
எனலாம். ஸூக்ஷ்மஜீவன்களின் மூலமாய்
உண்டாகும் வியாதிகளை யெல்லாம் தொற்று
வியாதிகளென்று அறியவேண்டும்.

இந்த ஸூக்ஷ்மஜீவன்கள் எவ்விடத்தில்
இருக்கின்றன என்று நீங்கள் அறிய விரும்ப
லாம். அவை உங்களுக்குத் தெரியாத இடங்
களில் வஸிக்கவில்லை. ஸாமானியமாய் நமது
சரீரத்தின் மேலும், நமது குடல்களுக்குள்ளே
யும், நமது வீட்டினுள்ளேயும், வெளியிலும்,

காற்றிலும், ஜலத்திலும், மற்றும் நாம் எவ்விடத்தைச்சோதித்தபோதிலும் அவ்விடங்களிலெல்லாம் இருக்கின்றனவென்றே சொல்லவேண்டும். எவ்வெவ்விடங்களில் அசுசியும், அழுகிப்போன பதார்த்தங்களும் விசேஷமாயிருக்கின்றனவோ, அவ்விடங்களிலெல்லாம் ஸூக்ஷ்மஜீவன்கள் அளவின்றி செழித்து வளரும். நமது வீடுகளில் நம்முடைய கால்களால் மிதிக்கப்படும் எரும்புகள் ஈக்கள் முதலியவற்றிற்குத் தெரிந்த சில விஷயங்கள் மாத்திரம் நமக்கும் தெரியுமானால், மிகவும் பிரசஸ்தமானதென்று கொண்டுவரப்படும் தண்ணீரிலும் கிருமிகள் நிரம்பவும் இருக்கின்றனவென்று நாம் கூறுவோம். (1, 2, 3-வது படங்களைப் பாருங்கள்.) அவ்விதமான நுண்ணறிவு நமக்கும் இருக்குமேயாகில், எவ்வளவு நிர்மலமான பொருளைப் பார்த்தபோதிலும் அதிலும் நிரம்ப அழுக்கு இருப்பதாக எறிந்துவிடுவோம். ஈயினுடைய கண்ணைப்போல் நம்முடைய கண்ணும் அமைக்கப்பட்டிருந்தால், வீட்டிற்கு அருகில் மக்கிக்கொண்டிருக்கும் பசுஞ்சாணத்தை ஒருமுறை நாம் பார்த்ததும், பிறகு பல மாதங்கள் வரையில் அன்னத்வேஷம் ஏற்படுமாறு மனது மிகவும் அருவருப்பு கொள்ளும். (4-வது படத்தில் பசுஞ்சாணம் கலந்த ஜலத்தில் ஸூக்ஷ்மமான கிருமிகள் காட்டப்பட்டிருப்பதைப் பார்க்க.)

மேற்கூறிய விதமாய் எவ்விடத்தைச் சோதித்தபோதிலும் அசுத்தமான பிரதேசங்களில் ஸூக்ஷ்மமான ஜீவராசிகள் வியாபித்திருப்பதாய் அறியப்படுகின்றது. ஆனால் அவை எவ்விதமான உருவங்களுள்ளவை? அவைகளுக்குண்டான ஜாதிபேதங்கள் யாவை? அவற்றிற்கு ஆஹாரம் என்ன? இவ்விஷயங்களை இங்கு வெகு சுருக்கமாய் எழுதுகின்றேன்:—

1. ஸூக்ஷ்ம ஜீவராசிகளில் சில ஜாதிகள் மனிதரைப்போலவே பிராணவாயு வியாபித்திராத இடங்களில் ஜீவித்திருக்கமாட்டா. இவற்றில் சில ஜீவன்கள், புலி, சிங்கம் முதலிய மஹாமிருகங்களைப் போல் உயிருடன் கூடிய அவயவங்களையே தின்றுப் பிழைக்கும் இயல்புடையன. மற்றும் சில ஜீவன்கள், காகம் முதலியவற்றைப்போல் முற்றிலும் நசித்துப்போய் அழுகிப் பதன்கெட்ட அவயவங்களையும் தின்றுவரும். மேற்கூறிய இரண்டுவித ஜீவ இனங்களும் தமது நடவடிக்கைகளால் ஸாமானியமாக ஜந்துக்களின் தன்மையுடையவைகளாயிருப்பதால், இவற்றிற்கு ஸூக்ஷ்மஜந்துக்கள் (Protozoa) எனப் பெயர் வழங்கப்படும். இந்த இனத்தைச் சேர்ந்த ஸூக்ஷ்மஜந்துக்கள் இதர ஜந்துக்களை அல்லது ஜந்துக்களின் அவயவங்களை ஆஹாரமாகக் கொண்டவைகள் (Holo[illegible] Nutrition).

2. ஸூக்ஷ்ம ஜீவன்களில் வேறு சில ஜாதிகள் நாய்க்குடை போன்றவையாம். இவை அழுகிக்கொண்டிருக்கும் பதார்த்தங்களிலேயே வளரும். உயிருடனிருக்கும் ஜந்துக்களையாவது, விருக்ஷஜாதிகளையாவது தின்பதில் இவற்றிற்குச் சக்தியில்லை. அழுக்கடைந்து அழுகின வஸ்துக்களே (Saprop[illegible]ic Nutrition) இவற்றிற்கு உணவாகின்றன. இவற்றிற்குக் காளான்கள் (Fungi) என்று பெ[illegible] நாய்க்குடையும் ஒரு காளான் என்கிற ஜா[illegible]யைச் சேர்ந்ததாம்.

3. வேறு சில ஜாதிகளைச் சேர்ந்த ஸூக்ஷ்ம ஜீவன்கள் விருக்ஷவர்க்கங்களைப் போன்றவை. இவை நமது கண்களுக்குப் புலப்படக்கூடியவைகளாயில்லாமற்போனாலும், இலை தழைகளைப்போல் பசுமை நிறமற்றவைகளாயிருந்தாலும், செடிகளைப்போல் கரியமிலவாயுவிலிருந்து கரியையும் பிராணவாயுவையும் பிரித்து, கரியைமட்டும் தமது சரீர போஷணைக்காக உபயோகப்படுத்திக்கொண்டு, பிராண

வாயுவை வெளியில் விட்டுவிடுந் தன்மையன. இவ்விதத் தாவரங்கள் எனப்படும் விருக்ஷ வகைகளை (Holophytic nutrition) உணவாகின்றன. ஆகிலும் சில ஸூக்ஷ்ம ஜீவன்கள், ஜந்துக்களைப்போல் சிறிது ஆஹாரத்தையும், விருக்ஷவர்க்கங்களைப்போல்சிறிது ஆஹாரத்தையும்; நாய்க்குடைகளைப்போல்மற்றும்சிலஉணவுகளையும் தின்றுப் பிழைக்கும் இயல்புடையவைகளாகவும் இருக்கின்றன. இத்தகைய ஜந்துக்களின் உணவானது மிச்ராஹாரம் எனப்படும். இவ்வித ஸூக்ஷ்ம ஜீவன்கள் பாக்டீரியாக்கள் (Bacteria) என்று சொல்லப்படும்.

ஸாதாரணமாய் எல்லா ஜாதி ஸூக்ஷ்ம ஜீவன்களும் இருட்டில் நன்றாக விருத்தியாகும். மிகவும் பிரகாசமான வெளிச்சத்தினால் அவை பெருகுவது குறைந்துபோய் கிரமமாக நசித்துவிடும். ஸூக்ஷ்மஜீவன்களைக்காட்டிலும், அவற்றின் முட்டைகளானவை வெயில் குளிர் முதலியவைகளால் எளிதில் நாசமடையாமலிருக்கும். வெகு உஷ்ணமான தண்ணீரில் ஸூக்ஷ்ம ஜீவன்கள் இறந்துபோனபோதிலும், அவைகளால் இடப்பட்ட முட்டைகள் மாத்திரம் 130 டிக்ரி உஷ்ணம் ஏறுகிற வரையில் கூட பிழைத்திருக்கக்கூடும்.

மனிதருக்கு வரும் தொற்று வியாதிகளை ஆராய்ந்து பரிசோதனைசெய்து பார்த்தால், ஸூக்ஷ்ம ஜந்துக்கள், காளான்கள், பாக்டீரியாக்கள் இம்மூன்றில் பாக்டீரியாக்களே பெரும்பான்மையான தொற்று வியாதிகளை உண்டுபண்ணுமென்று அடியில் குறிப்பிடும் அட்டவணையினால் அறியப்படலாம் :—

1. குளிர்க்காய்ச்சல் என்னும் விஷம ஜ்வரம் (Malaria).

2. ரக்தாதிஸாரமென்னும் ஒருவித க்ரஹணி ரோகம் (Amoebic Dysentery).

இவ்விரண்டும் ஸூக்ஷ்ம ஜந்துக்களால் (Protozoa) உண்டாகும் வியாதிகள்.

1. ஆஸ்யபாகம் எனப்படும் ஒரு வகையான வாய்ப் புண் (Thrushi).

2. விசர்ப்பம் என்கிற ஒருவித அக்னியம்மை (Herps).

3. படர் தேமல் (Ring worm).

4. விசர்ச்சிகா என்கிற ஒரு வித கட்டிகள் மாதிரியான சர்மரோகம் (Actinomycosis).

5. காலில் உண்டாகும் ஒரு விதமான புண் (Madura foot).

6. சோபம் (Tenia Versicolor).

இந்த ஆறும் காளான்களால் (Fungi) உண்டாகிற ரோகங்கள்.

1. க்ஷய ரோகம் (Tuberculosis).

2. கபவாதஜ்வரமென்று அழைக்கப்படும் அபிந்யாஸஜ்வரம் (Pneumonia).

3. மஞ்சள் நிறமான பிரமேஹம் அல்லது வெள்ளை ரோகம் (Gonorrhoea).

4. ஸந்நிபாத ஜ்வரம் (Typhoid Fever).

5. தனுர்வாதம் (Titanus).

6. விஷூசி (cholera).

7. கபஜ்வரம் (Influenza).

8. மஹாமாரி (Plague).

9. கபால ஸந்நிபாத ஜ்வரம் என்கிற ஒருவித நூதன ஜ்வரம் (Cerebro-spinal Fever).

10 ஸூதிக ஜ்வரம் (Suppuration).

11. ஸர்பி என்கிற ஒருவித தோல் வியாதி (Grysipelas).

12. லிங்கத்திலுண்டாகும் உபதம்சம் என்கிற ஒருவித மேஹ விரணம் (Soft Chancre).

13. குஷ்டம் (Leprosy).

14. சூகதோஷம் எனப்படும் ஒருவித மேஹகாரக ரோகம் (Syphillis).

15. மேஹவித்ரதி என்கிற பசுக்களுக்கு உண்டாகும் ஒரு வியாதி (Anthrox); இது மனிதருக்கும் தொற்றக்கூடும்.

16. கோமாரி (Foot and mouth disease)

இதுவும் பசுக்களுக்கு உண்டாகிற வியாதி; மனிதரிடமும் தொற்றிக் கொள்ளக்கூடும்.

இவை பாக்டீரியாக்களால் உண்டாகும் ரோகங்கள். ஆனால், பாக்டீரியாக்களால் உண்டாகும் பிணிகள் இவ்வளவோடு நிற்கவில்லை. அவை எண்ணிறந்தவைகளெனவும் சொல்லலாம்.

இந்தத் தொற்று வியாதிகளில் சில, ஒருவரையொருவர் தொட்டுக் கொள்வதாலாவது, வியாதிக்கிரஸ்தர்கள் இருக்குமிடங்களில் கூடவே வஸிப்பதாலாவது உண்டாகக்கூடும். இதில் சில வியாதிகளை யுண்டுபண்ணும் ஸூக்ஷ்மஜீவன்களடங்கிய திரவபதார்த்தத்தை ரோகியின் இரத்தத்திலிருந்து அல்லது உடம்பிலிருந்து எடுத்து மற்றொருவனுடைய தேஹத்தில் குத்தியாவது வேறுவிதமாகவாவது உட்செலுத்தினால், இரண்டாவது மனிதனுக்கும் அதே வியாதி உண்டாகும். வேறு சில தொற்று வியாதிகள், ரோகிகள் உபயோகப்படுத்திய ஜலம் முதலிய பதார்த்தங்களின் மூலமாய் ஒருவரிடமிருந்து மற்றவரிடம் ஸம்பந்திக்கும். ரோகிகளால் விடப்படும் ஆஹார பதார்த்தங்கள், மல மூத்திரங்கள், துணிகள், அவர்கள் கையாண்ட சொம்பு இவை முதலியவை ரோகிகளிடமிருந்து ஸூக்ஷ்ம ஜீவன்களையும் அவற்றின் முட்டைகளையும் இதர ஸ்தலங்களிலும் வியாபிக்கச் செய்ய ஸஹாயமாயிருக்கின்றன. அன்றியும் எறும்புகள், கொசுக்கள், ஈக்கள், மூட்டைப்பூச்சி முதலிய ஜந்துக்களிடம் வேறு சில ஸூக்ஷ்ம ஜீவன்கள் தங்கியிருந்து, அவை நம்மைக் கடிக்கும்போது அவற்றினிடமிருந்து நமதுடலில் அந்த ஜீவன்கள் சேர்ந்துவிடுவதுண்டு. நமது சரீரத்திலாவது, இரத்தத்திலாவது, அல்லது நமதுடலிலுள்ள இதர திரவ பதார்த்தத்திலாவது ஸூக்ஷ்ம ஜீவன்கள் பிரவேசிப்பதற்கு அடியிற் கூறப்படுமாறு [illegible]ன்கு வழிகளுண்டு:—

1. சரீரத்தில் ஏதாவது க[illegible]யம் [illegible] பண்ணி அதன் மூலமாய் உட்செலுத்[illegible] (Inoculation).

2. மெதுவான சர்மம் முதலியவற்றின் மூலமாய் ஊறி சரீரத்தில் பிரவேசிப்பது (Absorbtion).

3. ச்வாஸ மூலமாய் உறிஞ்சுதல் (Inhal-ation).

4. வாயால் விழுங்குதல் (Ingestion).

சில வியாதிகளை யுண்டுபண்ணும் ஸூக்ஷ்ம ஜீவன்கள் மேற்கூறிய வழிகளில் ஏதேனுமொரு விதத்தில் சரீரத்தினுள் பிரவேசிக்கும். வேறு சில ஸூக்ஷ்ம ஜீவன்கள் இரண்டு அல[illegible] மூன்று விதங்களில் உட்புகக் கூடு[illegible]

தொற்று வியாதிகளை யுண்டாக்கும் ஸூக்ஷ்ம ஜீவன்கள் நமது சரீரத்திலிருந்து வெளிவருவது எவ்வாறு என்கிற விஷயத்தையும் சிறிது சுருக்கமாய் தெரிந்து [illegible] யுக்தமாகும்:—

1. வாய், கண்கள், மூக்கு, ச்வா[illegible] இவைகளிலிருந்து உமிழ் நீர், பிளிச்சை, [illegible] கபம் இவற்றுடன் வெளி வந்துவிடும்.

2. குடலிலிருந்து பேதியின் மூல[illegible] வெளியாகலாம்.

3. மூத்திரத்தின் மூலமாய் [illegible] லாம்.

4. புண்கள், சிரங்கு இவற்றிலிருந்து வெளியாகும் சிண நீர், சீழ் முதலியவற்றின் மூலமாகவும், அவற்றிலிருந்து உலர்[illegible] உதிர்ந்து விடும் சதைகள் மூலமாகவும் வெளி வந்து விடக்கூடும்.

பற்பல விதமான ஸூக்ஷ்ம ஜீவன்கள் நமது சரீரத்தினுள் பிரவேசித்தவுடனே வியாதியும் வெளிப்படையாகக் காணத் தொடங்கும். நமது சரீரத்தினுள் ஸூக்ஷ்ம

[illegible]ன்கள் [illegible]பிரவேசிக்கையில், அவற்றின் [illegible]ண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்து, [illegible]கு ஒவ்வொரு மணிக்கும் சரீரத்திற்குள் [illegible]ர்ந்து நூற்றுக்கணக்கான முட்டைகளை [illegible] தொடங்கி, இறுதியில் சில நாட்களி[illegible]ய இலக்ஷக் கணக்காகவும் கோடிக் [illegible]க்காகவும் ஆய்விடும். நமது சரீரத் [illegible]துள் ஸூக்ஷ்ம ஜீவன்கள் பிரவேசித்தது [illegible]ல், தொற்று வியாதிகளுக்கு முக்கி[illegible]யுள்ள தலைநோய், ஜ்வரம் முதலிய ஏதே [illegible]ம் சில குறிகள் உண்டாகும் வரையில் [illegible] ஜீவன்கள் உள்ளே தங்கியிருக்கும் காலத்திற்கு அந்தர்கதம் அல்லது அடைகிடக்கும் காலம் (Incubeation period) என்று பெயர். இந்த அடைகிடக்கும் காலம் சில ரோகங்களில் மிகக் குறைவாகவும், வேறு சில வற்றில் பத்து அல்லது பதினைந்து தினங்களளவும் நீடிப்பதாகவும் இருக்கின்றது. இது அந்தந்த ஜாதி ஸூக்ஷ்மஜீவன்களின் தன்மைக்கேற்கவும், ரோகியின் பலாபலங்களை அனுஸரித்தும் மாறுபடும். அடை கிடக்கும் காலத்தில் ரோகியினால், தனக்கு இவ்விதமான வியாதி வரப்போகிறதென்று அறிய முடியாது.

சில தோற்று வியாதிகளின் பற்பல நிலைமைகள்.

[illegible]வியாதியின் பெயர்.	அடைகாக்கும் காலம்.	வியாதியை நிர்த்தாரணம் செய்யக் கூடியநாள்.	வியாதி இறக்கத் தொடங்கும் நாள்.	ரோகியைவிட்டு ரோகம் விலகக் கூடிய நாள்.	ரோகமில்லாதவருடன் சேர்ந்துக் கொள்ளக்கூடிய நாள்.
1	2	3	4	5	6
[illegible]ரிகை யென்[illegible] பெரிய அம்மை (S[illegible]ll Pox)	10 முதல் 15 நாட்கள்.	ஜ்வரம் வந்தபின் மூன்றாவது நாள் தழும்புகள் காணும்.	9-வது அல்லது 10-வது நாள்.	2 முதல் 4 வாரம் வரையில்	தழும்புகள் முற்றிலும் உதிர்ந்து போன ஒருவாரம் கழித்து.
[illegible] உபிசா என்று[illegible] (Chic-ken[illegible])	10 முதல் 14 நாட்கள்.	ஜ்வரம் கண்ட தினமே தழும்புகள் ஆரம்பிக்கும்.	4-வது அல்லது 5-வது தினம்.	1-வது அல்லது 2-வது வாரம்.	தழும்புகள் உதிர்ந்துபோன ஒரு வாரம் கழித்து.
இராமக்கன் அல்லது தட்டம்மை (M[illegible]sles.)	10 முதல் 12 நாட்கள்.	ஜலதோஷம் பிடித்தது முதல் நாலாவது நாள்.	7-வது நாள்.	பெரும்பாலும் 2 வாரங்கள்.	சரீரத்திலுண்டான தழும்புகளின் சர்மம் உதிர்ந்து இருமலும் போன பிறகு.
ஸந்நிபாத ஜ்வரம் (Typhoid Fever.)	7 முதல் 21 தினங்கள். சராசரி பதினைன்குதினம்.	8 முதல் 13 நாட்கள்.	17 முதல் 22 நாட்கள்.	ஜ்வரம் விட்டபின் 42 நாட்கள் வரையில்.	எவ்விதமான வியாதிக் குறியும் இல்லாமலிருக்க வேண்டும்.
வாத[illegible]வரம் அல்லது [illegible]டக்கம்மை (Deng[illegible] Fever.)	2 முதல் 6 தினங்கள்.	1 முதல் 4 தினங்கள்.	3 அல்லது 4 தினங்கள்.	10 அல்லது 14 தினங்கள்.	ஆரோக்கிய நிலைமை உண்டான பின்பு.
புட்[illegible]ரம்மை என்கிற [illegible] டாலஜ் (mump[illegible])	10 முதல் 25 நாட்கள்.	2 அல்லது 3 தினங்கள்.	7 முதல் 10 நாட்கள்.	4 வாரங்கள்.	வீக்கம் முற்றிலும் போன பிறகு ஒருவாரம் கழித்து.
கக்குவாயிருமல் அல்லது [illegible]பயிருமல் (Wh[illegible]ingCough)	7 முதல் 14 தினங்கள்.	சில ஸமயம் இதன் சுரூபம் தெரிய 3 வாரம் பிடிக்கும்.	21 தினம் முதல் 42 தினங்கள்.	வியாதி ஆரம்பித்தது முதல் 6 வாரம்.	இருமல் நன்றாக குணமான பின்பு.

ஒரு வியாதியைப் பார்த்தவுடன் அது தொற்று வியாதியா அல்லவா என்று தெரிந்து கொள்வதற்கு அடியிற் குறிப்பிடும் 5 விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும்:—

1. ஒரு வியாதியை உற்பத்தி செய்யும் ஸூக்ஷ்ம ஜீவன்கள், அதே வியாதியுடன் கூடிய எல்லா மனிதருடைய சரீரத்திலும் காணப்பட வேண்டும்.

2. இவ்விதம் கண்டு பிடிக்கப்பட்ட ஸூக்ஷ்ம ஜீவன்களை நாம் தனியாக எடுத்து ஸாதாரணமாய் ஸூக்ஷ்ம ஜீவன்கள் தின்னும் உணவை அவற்றிற்குக் கொடுத்தால், அவை அதைத் தின்று வளரவேண்டும்.

3. இவ்வாறு வளர்க்கப்பட்ட ஸூக்ஷ்ம ஜீவனை ஆரோக்யமாயிருக்கும் இதர மனிதர்களுடைய சரீரத்தினுள் ஏற்றினல், அந்த ஜீவன் அப்புதிய மனிதனுடைய சரீரத்தில், முதல் ரோகிக்கு இருந்த வியாதிக் குறிகள் அனைத்தையும் உண்டாக்க வேண்டும்.

4. இவ்வாறு வியாதி யடைந்த ரோகியின் சரீரத்தில் இந்த ஸூக்ஷ்ம ஜீவன்கள் மறுபடியும் பரிசோதிக்குங்கால் காணப்பட வேண்டும்.

5. இந்த ஜீவன்கள் திரும்பவும் மற்றொரு மனிதனுடைய சரீரத்தில் இதே வியாதியை உண்டாக்கக் கூடிய சக்தி யுள்ளவைகளாயிருக்கவேண்டும்.

FILTHY ULCERS.

சேற்றுப் புண்.

BY

DR. [illegible] S. JAGADISAN.

Physician and Surgeon.

இத்தேசத்தில் இப்பொழுதும் சில ரோகங்கள் கவனிக்கப்பட்டும், மற்றும் சில ரோகங்கள் ஜனங்களால் அலக்ஷியம் செய்யப்பட்டும் வருகின்றன. அவற்றுள் மேற்கண்ட வியாதியும் ஒன்று. இவ்வியாதியினால் பெரும் பான்மையோர் அவஸ்த்தைப்பட்டு வருகையிலும், ஜனங்கள் இதை ஒரு தீங்கு செய்யக்கூடிய வியாதியாக எண்ணாமல், தற்காலத்தில் சிறிது குணந்தரக்கூடிய ஏதோ சிகித்ஸையை செய்துகொண்டுவருகிறார்கள். இந்த சேற்றுப்புண் விசேஷமாய் இக்கியஸ்த்ரீகளுக்கு உண்டாய், பலமுறையும் இதனால் அவர்கள் கஷ்டப்படுவதை நாம் பார்த்து வருகிறோம். நமது தேசத்தில் இவ்வியாதி உண்டாகாத மனிதர் அரிது.

காரணம்:—இந்த வியாதி உற்பத்தியாவதற்கு அனேகம் பேர் அனேக விதமான [illegible] காரணங்கள் சொல்லுகிறார்கள். ஆனால் [illegible]ம் உபயோகிக்கும் ஜலமே முக்கிய கா[illegible] என்று எண்ண வேண்டும். ஆயினும், ஜ[illegible] அலைகிறவர்களுக் கெல்லாம் இது த[illegible] உண்டாவதாகவும் தெரியவில்லை [illegible] ஜலத்தில் இவ்வியாதியை உண்டாக்கக்[illegible] ஏதோ சில தோஷம் இருக்க வேண்டு[ம்] என்றும் அவ்வித தோஷங்களடங்கிய ஜலத்தி[illegible] பந்தத்தினாலேயே இவ்வித புண் [illegible] தென்றும் கூறவேண்டி யிருக்[illegible] ணமாய், சேற்றில் அலைகிறவர்[illegible] உண்டாவதைப் பார்த்து சேற்றுப் பு[illegible] றும், சென்னையில் குழாய் ஜலத்தில் [illegible] மூதும் நடமாடுகிறவர்களுக்கு இவ்வியா[illegible] நேரிடுவதைப் பார்த்து சிலர் குழாய்ப்புண் என்றும் இதை வழங்கி வருகின்றனர். சே[illegible] குழாய்த் தண்ணீர் இவ்விரண்டும் [illegible] இப்புண்ணை உண்டாக்கக் கூடியவைகளா யிருப்பதால், இதற்கு அவ்விரண்[illegible] ரையும் கொடுக்கலாம். இவ்வித[illegible] உற்பத்தி செய்பக்கூடிய சில [illegible] கள் (Microbes) ஜலத்திலும் சேற்றிலும் இருக்கின்றன. இந்த ஜீவன்கள் [illegible] வித ஜலத்திலும் சேற்றிலும் அலைந்து வரு[illegible] மனிதருடைய கால்களில் சேர்ந்து, அவ்வி[illegible]

ற்றிக்கொள்கின்றன. பிறகு கிரமமாக கா
ன் இடுக்குகளில் அடங்கியிருந்து இவை
மது வேலையை நடத்தத் துவக்குகின்றன.
லர் உலோஹங்களின் கலவைப்பொருட்க
ல் (Metalic Compounds) இது உண்டா
தாகவும் கூறுகின்றனர். சேறு முதலியவற்
ள ஸூக்ஷ்ம ஜீவன்களாலேயே இந்த
யாதி உண்டாவதாக எனது அநுபவத்
தைக்கொண்டு நிச்சயிக்கிறேன்.

குறிகள்:—(1) சேற்றிலாவது, கெட்ட
த்திலாவது அலைந்து வரும்போது முதலில்
ல் விரல்களின் இடுக்குகளில் உள்ள மேல்
ால் சிறிது வெண்மைநிறம் அடையும்.
பிறகு அங்கு தினவு உண்டாகும். (3)
ரிய அவ்விடங்கள் சிவந்து விடும்.
தோலின் மேற்புரையானது (Epidermis)
ிய ஆரம்பிக்கும். (5) எரித்தலெடுக்கும்.
சிறிது நாட்கள் செல்லுகையில் வட்டம்
டமாகப் புண்கள் உண்டாகும்; அப்
ாழுது சர்மத்தின் உட்புரையும் (Dermis)
ந்து புண் விருத்தியாகும். சிலருக்கு தோ
ன் மேற்புரையிலேயே படைகளைப்போன்ற
ingworm) புண்கள் உண்டாவதுண்டு;
வற்றால் தினவு விசேஷமாய் உண்டாகும்.
சில நாளடைவில் இப்புண் படர்ந்து விருத்
யாகும். (8) அப்பால் கறையான் அரித்தது
ால் பாதம் முடியவும் பரவி, சர்மத்தின்
மற்புரை அனைத்தையும் அப்புண் தின்று
ிடும். காலக் கிரமத்தில் காலெல்லாம் எரித்
எடுப்பதுடன் பார்வைக்கும் வெகு கோர
யிருக்கும்.

சிகித்ஸை:—(1) ஜலத்தில் இந்த வியாதி
ய உண்டாக்கக்கூடிய சில ஸூக்ஷ்மஜீவன்
ள் இருப்பதாக முதலிற் கூறியிருக்கிறோமா
கயால், ஸ்நானம் செய்யும்போது ஜலத்தை
ன்றாகக் காய்ச்சி உபயோகித்தால் இந்த
யாதியை வரவிடாமல் தடுக்கலாம். (2) பிறகு
பாதங்களில் சிறிதும் ஈரமில்லாமல் உடனே துடைத்து விடவேண்டும். (3) குழாய் நீரில் அடிக்கடி நடமாடக் கூடாது; அவ்விதம் ஜலத்தை மிதிக்கவேண்டி நேரிட்டால், மறுபடியும் உலர்ந்த துணிகளைக் கொண்டு விரலிடுக்குகளை நன்றாகத் துடைக்கவேண்டும்; விரல்களின் இடுக்கில் மண் அல்லது சேறு தங்கியிருந்தால் உடனே வெந்நீர் விட்டுக் கழுவி ஈரத்தைத் துடைக்கவேண்டும்.

ஔஷதம்:—(1) சிலர் தற்கால சாந்தியாக வசம்பையும் மஞ்சளையும் அரைத்து இப்புண்களின்மேல் தடவுகிறார்கள். ஆனால், இதனால் நல்ல குணம் உண்டாவதில்லை. (2) சிலர் மண்ணெண்ணெயைத் தடவுகிறார்கள். இதனால் எரித்தல் அதிகம் எடுக்கும்; மற்றும் வியாதி குணமாவதில்லை. (3) இங்கிலீஷ் மருந்தில் சிலவற்றையும், இந்திய மருந்துகளில் சிலவற்றையும் கலந்து உபயோகித்தால் இவ்வியாதி தீரவும் ஸ்வஸ்தமாய் விடுகிறது என்று என் அநுபவத்தில் அறிந்திருக்கிறேன். பைஸால் (Pisal) என்கிற ஒருவித ஔஷதத்தை நான் உபயோகித்து குணங்கண்டதுண்டு. அதில் சேர்ந்துள்ள சரக்குகளாவன:—

(1) கர்ப்பூரம், (2) ஸாலிஸிலிக் அம்லம் (Salicylic acid), (3) நாப்தலீன் (Naphthalene), (4) மாசக்காய், (5) கடுக்காய், (6) கறிமஞ்சள், (7) துவட்டிக்காய், (8) கிழ்க்காய் நெல்லி, (9) குப்பை மேனி, (10) ஆடாதோடை.

இவைகளுள் கர்ப்பூரமே அதிக அளவில் சேர்க்கப்படும். மேற்கூறிய கூட்டு மருந்தை இரவில் படுக்கும்போது பாதங்களில் நன்றாகப் பூசிவிட்டு, காலையில் வெந்நீர்விட்டு நன்றாகக் கழுவி வந்தால், இரண்டு முறையில் சேற்றுப்புண் குணமாய்விடும். இந்திய ஸ்திரீகள் இதனால் படும் கஷ்டத்தைக் கண்டு, இதுவும் ஒரு வியாதியென்று கவனம் செலுத்தி, இது வராமலிருப்பதற்கும், வந்தால் உடனே குணப்படுத்திக் கொள்ளவும் இவ்வுபாயங்களை அறிந்திருப்பது மிகவும் அவசியம்.

MEASURING OF THE MIND.

மனதை அளத்தல்.

மூளையின் வேலையைப்பற்றி ஓர் அபூர்வவிஷயம்.

By,
SRI TRIVIKRMA SARMA, B. A;

உலகில் அரிசி, பருப்பு, நெய், ஔஷதங்கள் இவை முதலியவைகள் அளக்கப்படுவதையே நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். அவற்றைப்போல் மூளையில் நடந்தேறும் மனதின் ஸம்பந்தமான வேலைகளை அளப்பது எவ்விதமென்று இத்தலையங்கத்தைப் பார்ப்பவர் எல்லோரும் ஆச்சரியமுறுவர். ஆகிலும் தகுந்த ஆதாரத்தைக் கொண்டே நான் இதை எழுதப் புகுந்தேன். 'பியர்ஸன்ஸ் மாகஸைன்' என்கிற பத்திரிகையிலும் இவ்விஷயம் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது.

ஐரோப்பா, அமெரிகா முதலிய தேசங்களில் இதைப்பற்றி அனேக அரிய ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக நூதனமாய் இயந்திரங்களும் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவில் ஆக்ஸ்போர்ட், கேம்ப்ரிட்ஜ், மாஞ்செஸ்டர், இலண்டன் முதலிய நகரங்களிலுள்ள யூனிவர்ஸிடிகளில் மனதின் தன்மைகளை அறிவதற்காக ஆராய்ச்சிசாலைகள் (Psychological Laboratories) இருக்கின்றன. ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடியில் மாணாக்கருடைய மனதை வருஷந்தோறும் ஒருமுறை அளக்கவேண்டியது அவசியமென்று ஒரு நியமம் ஏற்பட்டிருக்கின்றது. ஜெர்மனி, அமெரிகா இத்தேசங்களிலுள்ள பாடசாலைகளில் இவ்விஷயம் அதிகமாய் கவனிக்கப்பட்டு விருத்தியாய் வருகிறது. ஆதிகாலத்தில் நமது மூத்தோர்கள் தீர்மானித்திருந்த விஷயங்களைப்பற்றி இப்பொழுது அனேக பரிசோதனைகள் செய்து, அவற்றின் வாஸ்தவம் இன்னதென்று கண்டறிந்து வெளியிடுகின்றனர்.

மனதும் மூளையும்:—முதலில் மனது என்னும் விஷயம் இன்னதென்று அறியவேண்டும். மனது இன்னவிதமானதென்று அறியப்படாமலிருக்கும் வரையில், அதற்கு ஸம்பந்தப்பட்ட இதர விஷயங்களும் அறியப்படமாட்டா. ஆனால், மனதின் சுரூபத்தைப்பற்றிய தத்துவங்களின் பரிபாஷை நமக்கு அவசியமில்லை. ஆகிலும், மனதானது சரீரத்திற்குள்ள உணர்ச்சிகளின் ஒரு திரட்சியென்றும், அதற்கு மூளையே முக்கிய ஸ்தானமென்றும் அறிய வேண்டும். ஆனால் மூளையும் மனதும் ஒன்றென்று நினைப்பது பிசகு. மனம் வேறு, மூளை வேறு என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கவேண்டும். மனதிற்கு அனேக சக்திகள் உண்டு. உணர்ச்சி, அறிவு, நினைவு, கற்பனை, விசாரம் என்பவை மனதின் வெவ்வேறான சக்திகளாம். இந்த சக்திகளுக்கும் மூளைக்கும் நெருங்கிய ஸம்பந்தம் உண்டு.

மூளைக்கும் மனதின் சக்திகளுக்கும் உள்ள ஸம்பந்தங்களை ஆதாரமாகக் கொண்டே மூளைக்கும் ஸாமுத்ரிக ஏற்பாடுகள் (Phranology) சில உண்டாயிருக்கின்றன. இந்த ஸாமுத்ரிகவித்தையின் மூலமாகவே மூளையின் உருவம், பாரம், அமைப்பு முதலியவைகளை அறிந்து, இதைக்கொண்டே மனதை அளக்கும் உபாயமும் ஆரம்பிக்கப்பட்டது. 1830-ம் வருஷத்தில் மாணாக்கருக்கு வித்தையைக் கற்பிப்பதற்கு அனேக உபாயங்களை ஏற்படுத்தும் விஷயத்தில் ஸித்தாந்த கர்த்தராயிருந்த மிஸ்டர் கூம்ப் என்பவர் கூறியிருப்பதாவது—மூளையானது மிகவும் சிக்குள்ள ஓர் அற்புதமான அவயவம். அந்த அவயவத்தில் ஒவ்வொரு சக்திக்கும் தனித்தனியாக ஒவ்வொரு இடம் உண்டு. எப்படியென்றால், நினைவு என்னும் சக்திக்கு ஓரிடம், கணிதசாஸ்திரத்தில் திறமையுண்டாவதற்கு மற்றோரிடம் என்று இவ்விதம் ஏற்பட்டிருக்கின்றது. வெவ்

வேறு வகையான இந்த இடங்கள் மூளையில் ஒரே [illegible] இடத்தில் ஸம்பந்தப்பட்டிருப்பது போல் தோற்றினலும், அந்தந்த இடமானது [illegible]கள் வேலையை ஒழுங்காக நடத்தக்கூடிய [illegible]யல்புடையன. எவன் கலைசெய்வதில் விருப்பமுள்ளவனே அவனுடைய மூளையில் [illegible]லைக்கு முக்கியமாயுள்ள பிரதேசம் [illegible] மேன்மை பொருந்தியிருக்கும். இவ்விதமே கணிதசாஸ்திரத்தில் விருப்பமுள்ளவனுக்கு மூளையில் அதற்கு ஆதாரமான பிரதேசமும், ஞாபகசக்தி வேண்டியவனுக்கு அதற்கு ஆதாரமான பிரதேசமும் மேன்மையடைந்திருக்கும். இவ்விஷயங்கள் முகலில் மூளையின் ஸாமுத்ரிகமுறைகளை ஆதாரமாகக் கொண்டவர்களால் சொல்லப்படுகின்றன. ஆனால், மனோவிஞ்ஞானத்தை நன்கு அறிந்த இக்காலத்திய சாஸ்திரநிபுணர்கள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. இவர்கள் கூறுவதாவது:—

வீட்டின் வெளிப்புறத்தோற்றத்தைக் [illegible]டு, உட்புறமும் அதற்குத் தகுந்தவிதமே [illegible]தம் அமைந்திருக்குமென்று சொல்வது [illegible] ஸாத்தியமில்லையோ, அவ்விதமே, மூளையின் பாரம், உருவம், ஸாமுத்ரிகத் தன்மை இவைகளைக்கொண்டு மனதின் சக்தியும், மூளையின் உள்ளமைப்பு அல்லது அதன் வேலையும் அவ்விதமே அமைந்திருக்குமென்று சொல்வதும் ஸாத்தியமான விஷயமல்ல. மனதின் தத்துவத்தை அறிந்தவர், மூளையானது மனதுக்கு ஒரு தந்தியாபீஸ் போல் ஏற்பட்டிருக்கிறது எனக் கூறுகின்றனர். மூளைக்கும் மனதுக்கும் தந்தியாபீஸின் உபமானம் கூறப்படுவதை நோக்கி, இவ்விரண்டுக்குமுள்ள பேதமும் ஸம்பந்தமும் இவ்விதம் என்று ஒருவாறு அறியப்படலாமென நினைக்கின்றேன். மனது, மூளை இவ்விரண்டுக்குமுள்ள ஸம்பந்தம் இவ்விதமானதென்று இவ்வுபமானத்தைக்கொண்டு அறிந்துகொண்டால், பிறகு மனதை அளக்கும் விஷயமும் அறியப்படுவது கடினமாகத் தோன்றாது. அதையே இன்னும் சிறிது விவரிப்போம்.

தந்தியாபீஸில் அனேகம் நீண்ட கம்பிகள் இணைக்கப்பட்டிருப்பதை அனைவரும் கண்டிருக்கின்றனர். இவற்றில் ஒவ்வொரு கம்பியிலும் வேறு பல கம்பிகள் இணைக்கப்பட்டு, இக்கம்பிகள் தேசமெங்கும் வியாபித்திருக்கின்றன. இவ்விதமே உணர்ச்சியுடைய பெண்ணுடைய நரம்புகளும் சரீரத்தில் எங்கும் இடைவிடாமல் பரவியிருக்கின்றன. இந்த நரம்புகளில் பிரதானமான பிரிவுகள் இரண்டுண்டு. (1) உணர்ச்சியைத் தரும் நரம்பு மண்டலம். இந்த நரம்புமண்டலம் வெளிப்புறத்திலுள்ள புலன்களின் மூலமாய் உணர்ச்சியையுண்டாக்கும். அதாவது கண், காது, மூக்கு, நா, சர்மம் இவ்வைந்து இந்திரியங்களின் மூலமாய் வெளியில் நடந்தேறும் விஷயங்களை உணர்ச்சி நரம்புகள் உள்ளே மூளைக்கு எட்டவைக்கின்றன. இந்த நரம்புகளின் ஸமுதாயமே உணர்ச்சி தரும் நரம்புமண்டலம் (Sensory or in going Nerves) எனப்படும். (2) அவயவங்களை வேலை செய்யத் தூண்டும் நரம்புகள் (Motor or out going Nerves) இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவையாம். உணர்ச்சி நரம்புகளின் மூலமாய் உள்ளே மூளையினிடம் செய்திகள் போனவுடன், அச்செய்திகளுக்குத் தகுந்தவாறு அந்தந்த அவயவங்களுக்கும் செய்திகள் மூளையினிடமிருந்து இந்நரம்புகள் மூலமாய் வந்து அவை தூண்டப்படுகின்றன. இவ்விதம் கூறப்பட்ட இரு பிரிவுகளான நரம்புமண்டலங்களின் மூலமாய் நடக்கும் வேலையே, இந்நரம்புமண்டலங்கள் என்னும் தந்திகளுக்கு மூலஸ்தானமான மூளை செய்ய வேண்டிய முக்கிய வேலையாகும். ஒரு விஷயத்தைப் பார்க்கும்போதும், செவிகளால் கேட்கும்போதும், உணவுகளைப் புஜிக்கும்போதும், வாஸனைகளை முகரும்போதும், ஒரு வஸ்துவைப் பரிசிக்கும்போதும், கால்களால் நடக்கும்போதும் இவ்வேலைகளெல்லாம் முற்கூறிய இரு பிரிவுகளான நரம்பு மண்டலங்களின் ஒற்றுணர்ச்சியாலாகும் தூண்டுதலாலேயே நடந்தேறுகின்றன என்பதை நாம் நினைவில் வைக்கவேண்டும். ஆகையால், சரீரத்தின் எல்லா வேலைகளும், மனதில் நடந்தேறும் அந்தந்த ஆலோசனைகளும் மூளைக்கு ஸம்பந்தப்பட்ட நரம்புகளின் தூண்டுதலாலேயே நடந்தேறுகின்றன என்று இப்பொழுது நன்கு அறிவோம். (தொடரும்.)

வைத்திய கலாநிதி.

ப்ரமாதீச ஹூ மார்கழிமீ.

THE REPORT OF THE SELECT COMMITTEE OF MEDICAL REGISTRATION BILL.

வைத்தியப் பதிவு மஸோதாவைப் பற்றி ஸெலெக்ட் கமிட்டியாரின் ரிபோர்டு.

இந்த மஸோதாவைப்பற்றி சென்ற டிசம்பர் மாதத்தில் கவர்ன்மெண்டு கஜட்டிலும் பத்திரிகைகளிலும் விஷயங்கள் விவரமாய் வெளிவந்திருப்பதால், அவற்றை ஆதியோடந்தமாய் விரிவாக எழுதவேண்டிய அவசியமில்லை. ஆகிலும், அந்த ரிபோர்டில் கண்ட சில விஷயங்களைப் பற்றி மாத்திரம் நாம் விசாரம் செய்யாமல் விட்டு விடுவதற்கில்லை.

அந்த ரிபோர்டில் 2-வது பாராவில் 'இந்த மஸோதாவிற் கண்ட நிபந்தனைகளைப்பற்றி பொது ஜனங்கள் எங்களுக்கு ஒரு அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை' என்று எழுதியிருப்பதைப் பார்த்து நாம் மிகவும் ஆச்சரியப்படுகிறோம். நவம்பர்மாதம் 11-ம் தேதி ஸெலெக்ட்கமிட்டி நியமிக்கப்பட்டது; டிசம்பர்மாதம் 3-ம் தேதிக்குள்ளாகவே ஸெலெக்ட் கமிட்டியார் ரிபோர்ட் தயார் செய்துவிட்டார்கள்; அதாவது 20-நாட்களில் விஷயம் தீர்மானிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இவ்விஷயத்தைப்பற்றி தேச பாஷைகளில் விளம்பரம் செய்து வெளியூர்களில் உள்ள எல்லா ஜனங்களுக்கும் தெரியப்படுத்தி, பிற்பாடு சில நாள் வரையில் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்து, அப்படியும் அவர்களிட மிருந்து அபிப்பிராயம் ஒன்றும் வராமற்போனால், அப்பொழுதல்லவோ 'பொது ஜனங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை' என்று சொன்னால் பொருந்தும்? இதற்கு மு[illegible]ன இந்த மஸோதா கஜட்டில் தேசபாஷை[illegible]ல் பிரசுரிக்கப்பட்டது என்று சொல்லக்[illegible]ம். ஆகிலும், திருத்தம் செய்த அந்த மஸோ[illegible]தா ஆக்டாக ஆவதற்கு முன் எல்லா ஜ[illegible] ளாலும் அறியப்படவேண்டியது அவசிய[illegible] விஷயம். மேலும் கவர்ன்மெண்டு கஜட்டு[illegible] ஆபீஸ் உத்தியோகஸ்தரில் கூட பலர் கவ[illegible] பதில்லை. அப்படி யிருக்க, பொது ஜனங்[illegible] கஜட்டுகளை அப்போதைக்கப்போது ப[illegible] வர் மிகவும் குறைவு, அல்லது பெரும்பா[illegible] இல்லையென்றும் சொல்லலாம். ஆங்[illegible] குள்ள கலெக்டர், தாசில்தார், கிராமமுனிசீப் முதலியவர்கள்மூலமாய் கிராமங்[illegible] பட்டணங்களிலுமுள்ள வைத்தியர்[illegible] பொது ஜனங்களுக்கும் விஷயங்களை[illegible] மாய் எடுத்துரைப்பதற்கு ஏற்பாடு செ[illegible] இவ்வித பெரிய காரியங்களில் கவர்ன்மெ[illegible] பிரயத்தனம் செய்திருக்கவேண்டியது [illegible] யமையாத விஷயம். ஆரம்பத்தில் வை[illegible] ரத்ன பண்டித கோபாலாசார்லு, இப்[illegible] கையின் ஆசிரியர் முதலான சில ஆயு[illegible] வைத்தியர்களையும், யூனானி வைத்தியர்களையு[illegible] வரவழைத்து சென்னை கலெக்டர் அபிப்பிராயம் கேட்டார். அதிலும் ஏழெட்டு பெயருக்கு மேலில்லை. வெளியூர்களில் அவ்வளவு நடந்ததாகவும் தெரியவில்லை. ஸெலெக்ட் கமிட்டியார் தங்களுடைய ரிபோர்ட்டை [illegible] செய்வதற்கு முன், தேசபாஷைகளிலுள்ள பத்திரிகைகளிலும் தாங்கள் திருத்தப்போகும் விதங்களைப்பற்றியும், அவசியமானால் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை யறிந்து வேறுவித சீர்திருத்தங்கள் செய்வதைப் [illegible] விவரமாக பிரசுரம் செய்திருக்கவேண்டுமல்லவா? இங்கிலாந்து முதலிய நாடுகளைப்

போல் இந்தியாவின் நிலைமையும் இருந்தால், ஸெலெக்ட் கமிட்டி ஏற்பட்டவுடனே, அக்கமிட்டியின் மேஜைகளின்மேல் இப்படிப் பட்ட பெரிய விஷயங்களில் பொது ஜனங்களிடமிருந்து நூற்றுக்கணக்காகக் கடிதங்கள் வந்து விழுந்து குவிந்திருக்கும். இந்தியாவில் மற்ற படித்த வகுப்பாரும், கவர்ன்மெண்டாருக்கு இந்த மஸோதா ஒரு ஆக்டாக நிறைவேற வேண்டுமென்று அபிப்பிராயம் இருப்பதை பல ஜாடைகளால் அறிந்து, தமது அபிப்பிராயங்களை அறிவிக்க முடியாமல் இருந்திருப்பார். ஆகையால், பொது ஜனங்களிடமிருந்து அபிப்பிராயம் வருவதற்குத் தக்க அவகாசம் கொடுக்காமையாலும், ஜனங்களெல்லோரும் மஸோதாவிற்கண்ட விஷயங்களை அறிந்து தமது வாஸ்தவமான அபிப்பிராயங்களை அறிவிப்பதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்யாமையாலும் 'பொது ஜனங்களிடமிருந்து ஒருவித அபிப்பிராயமும் வரவில்லை' என்று கமிட்டியார் சொல்வது எவ்வளவு தூரம் நியாயமோ நம்மால் கூற முடியாது.

இந்த ரிபோர்டின் 4-வது பாராவில் குறிப்பிடப்பட்டிருக்கிற விஷயங்கள் இன்னும் ஸந்தேஹாஸ்பதமாயிருக்கின்றனவே யன்றி, ஆனரபுல் ஸர்ஜன் ஜெனரல் அவர்கள் சட்ட நிரூபணஸபையில் பேசியபோது ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகளை இந்த மஸோதாவானது எவ்விதத்திலும் பாதிக்காத வகையில் ஏற்படுத்தப்படுவதாய் வற்புறுத்தியவாறு தெளிவான வாக்கியம் சேர்க்கப்படவில்லை. 'க்ரேட்ப்ரிடன்-ஐர்லாந்து தேசத்தின் ஜெனரல் மெடிகல் கௌன்ஸில்' என்கிற பெரிய வைத்திய ஸங்கத்தினால் நிர்த்தாரணம் செய்யப்பட்டபடி ஆஸ்பத்திரிகள், அஸேலங்கள், டிஸ்பென்ஸரிகள் என்பவைகளுக்கு அர்த்தம் பண்ணிக்கொள்வதாகவும், அப்படியானால் ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகளை இந்த மஸோதா பாதிக்காதென்றும், ஆனால் 'க்ரேட்ப்ரிடன்-ஐர்லாந்து தேசத்து ஜெனரல் மெடிகல் கௌன்ஸில்' என்பதற்குப் பதிலாக 'இந்த ஆக்டின்படி ஏற்படும் வைத்தியாலோசனைஸபையாரால்' என்று சொல்வது உசிதமென்றும் ஏதோ விஷயங்களை வெகு சிக்குள்ளவைகளாக அமைத்திருக்கின்றனர். க்ரேட்ப்ரிடன்-ஐர்லாந்து தேசத்திய ஜெனரல் மெடிகல் கௌன்ஸிலுக்கும், சென்னையில் ஏற்படப்போகும் வைத்தியாலோசனை ஸபைக்கும் காரியநிர்வாஹ விஷயங்களில் அதிக வித்தியாஸமுண்டு. அவற்றைப்பற்றி நாம் விரிவாகக் கூறுவதற்கு இங்கு இடமில்லை. ஆஸ்பத்திரி அஸேலம் முதலியவைகளுக்கும், மற்றும் வைத்திய ஸம்பந்தமான அவ்வளவு பெரிய விஷயங்களுக்கும் அவ்விதம் விசேஷமான சில கோட்பாடுகளை ஏற்படுத்துவதற்கு ஒரு மாகாணத்தில் ஏற்படும் ஸாதாரண வைத்திய ஸங்கத்திற்கு அவ்விதமான பொறுப்புண்டாவது உசிதமா?

ரிபோர்டின் 18-வது பாராவில், ஷெட்யூலை மாற்றி யுக்தப்படி அமைப்பதற்கு மற்றொரு புதிய பகுதியினால் கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகையால், ஆயுர்வேத யூனானி வைத்தியர்களுக்கு ஒற்றுமையும் பொது நலப்பிரியமும் ஏற்பட்டு, இங்கிலீஷ் வைத்தியர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல் நமக்கும் ஸ்வாதந்த்ரியங்கள் வேண்டுமென்று கவர்ன்மெண்டாரிடம் எப்பொழுதேனும் இவ்வைத்தியர்கள் முறையிட்டுக்கொண்டால், கவர்ன்மெண்டாரும் இவர்களுடைய வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்டு ஒரு வேளை அநுகூலமாய் அபிப்பிராயம் தெரிவித்தால், அப்பொழுதுதான் ஒருக்கால் இத்தேசத்திய வைத்தியர்களை ஷெட்யூலில் சேர்த்துக்

கொண்டு, இங்கிலீஷ் வைத்தியர்களுக்கேற்ப இவர்களுக்கும் ஏதோ சிறிது ஸ்வாதந்த்ரியமும் செல்வாக்கும் கொடுக்கப்படுமேயன்றி, இப்பொழுதுள்ளபடி இந்திய வைத்தியர்களுக்கும் ஷெட்யூலுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை என்பதை நமது வைத்தியர்கள் கவனிக்கவேண்டும். ஆயுர்வேத யூனானி வைத்தியர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் வைத்தியம் செய்து பெரும்பான்மையான ஜனங்களுக்கு ஸஹாயம் செய்துவாராமற்போனால், இந்தியாவுக்கு வைத்திய விஷயத்தில் உண்டாகும் கஷ்டம் எவ்விதமென்று அப்பொழுது தான் தெரியும். நமது இந்திய வைத்தியர்களும் பொதுஜனங்களும் இனியாவது இவ்விஷயத்தில் கண்விழித்துக்கொண்டு ஒற்றுமை பாராட்டி ஸ்வாதந்த்ரியங்களைப் பெறுவதற்கு இங்கிலீஷ் வைத்தியர்களைப்போல் பெருமுயற்சி செய்ய முன்வரவேண்டும்.

இந்த ரிபோர்டில் ஆனரபுல் மிஸ்டர் ஜைனுலாபுடீன் ஸாஹெப் அவர்கள், ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகளை முற்றிலும் புறக்கணித்து விட்டதாகவும், அவ்வைத்தியர்களுக்கு அந்நியாயம் செய்யக்கூடிய ஆகி லக்ஷணம் இன்னும் இந்த மஸோதாவில் சிறிது இருந்து கொண்டே தான் இருக்கிறதென்றும், ஆயுர்வேத யூனானி வைத்தியர்களை யோக்கியதையில்லாத வைத்தியர்களுடன் சேர்க்காமல் ரெஜிஸ்டர் செய்யப்படாதவர் அல்லது செய்யப்பட்டவர் என்று பகுத்து வேண்டுமானால் விவஹரிக்கலாமென்றும், இவ்விதம் வற்புறுத்தும் வாக்கியங்களை மஸோதாவில் சேர்க்காத வரையில், இந்த ஆக்டானது பக்ஷபாதத்துடன் செய்யப்பட்ட சட்டதிட்டமாகவே கொள்ளப்படுமென்றும் அபிப்பிராயப்பட்டு எழுதுகிறார். மிஸ்டர் ஜைனுலாபுடீன் ஒருவராவது சட்டஸபையில் ஸ்தானம் வஹிப்பதால், இவ்வளவாவது நியாயத்திற்குப் போராட வழி யேற்பட்டது. இவ்விதம் போராடும் ஜைனுலாபுடீன் அவர்களை [illegible] மனதார வாழ்த்துகின்றோம்.

A SIMPLE METHOD OF TREATMENT FOR COLIC IN INFANTS.

சிசுக்களின் வயிற்றுவலிக்கு ஒரு ஸுலபமான சிகித்ஸை.

இப்பத்திராசிரியருடைய அனுபவத்தில் வந்த விஷயமானது இங்கு கூறப்படுகிறது. மூன்று மாதத்திய குழந்தை ஒன்று இரவிலும் பகலிலும் அதிகமாய் அழுதுகொண்டிருந்தது. அக்குழந்தையின் தாய் வெகு ஏழையவள். அவளுக்கு வேண்டியவர்களான வேறு சில ஸ்திரீகள் அவளிடம் வந்து, 'குழந்தைக்கு வயிற்றில் [illegible]ாலூட்ட வேண்டும்; அழுதபிள்ளை பால்குடிக்கும் என்று [illegible]லேயே பழமொழி யேற்பட்டிருப்பதையாவது நீ கேள்விப்படவில்லையா?' என்று கூறி அடிக்கடியும் குழந்தைக்குப் பால் கொடுக்கத் தூண்டி வந்தார்கள். இவ்விதம் செய்யச் செய்ய குழந்தைக்கு அவஸ்தையும் அதிகரித்து வந்தது. காரணம் என்ன?

ஸாதாரணமாய் வயிற்று நோயினால் கஷ்டப்படும் குழந்தைகளில் இருபதில் பத்தொன்பது கேஸுகளுக்கு, அளவுமிஞ்சி அடிக்கடி உணவூட்டுவது, அல்லது தாய்க்கு உண்டான மலபந்தம் என்கிற இவ்விரண்டில் ஒன்றுதான் முக்கியமான காரணமாகும் என்று கண்டறியலாம். அதிக உணவினால் அதி சீக்கிரம் வளருமென்று நினைத்தோ, அல்லது வேறு எந்தக் காரணத்தினாலேயோ பெரும்பான்மையான குழந்தைகளுக்கு ஒருமுறை ஊட்டிய உணவு முற்றிலும் ஜீரணமாவதற்குள்ளேயே மறுபடியும் வெகு சீக்கிரத்தில் ஆஹாரம் ஊட்டுவது

வழு... மாயிருக்கிறது. எப்பொழுது குழந்தை அழுகின்றதோ, அப்பொழுதெல்லாம் தாய் அதை எடுத்துக்கொண்டு முலையூட்டுவதை அனைவரும் அறிந்திருக்கின்றனர். குழந்தைக்குப் பசி விசேஷமாயிருந்தால், கையில் கடியான து... ஸாதாரண ஸமயங்களில் அடித்துக்கொள்வதைவிட இன்னும் பலமாகவும் ஏழெட்டு தடவை அதிகமாகவும் அடித்துக்கொள்ளும். இதை வைத்தியர்களே அறியக்கூடும். பசி... ...லாத ஸமயத்தில் முலையூட்டினால், குழந்தை ...னது அடிக்கடியும் விட்டு விட்டு உண்... அல்லது முலையுண்ணுமலே முகத்தை ...க்கிக்கொண்டு மறுபடியும் முன்போலவே அ... த்தொடங்கும். இக்குறியை அனைவரும் அறியக்கூடும்.

நினைத்தபோதெல்லாம் குழந்தைக்கு உணவூட்டுவதைப்போல், அக் குழந்தையின் தாயை அவ்விதமே காலநியமமின்றி இரவிலும் பகலிலும் அடிக்கடி ஆஹாரம் உண்ணும்படி ...ந்நாள் விடாமல் நிர்பந்தித்து வந்தால், ...ளுடைய குடலுக்கு என்ன நேரிடு...ன்று வைத்தியர் அவளைக் கேட்கும்போது, ...ளுக்கு, தான் செய்யும் வழக்கம் தவறென்று விளங்கக்கூடும். வேலை செய்யும் மனிதனுக்கு சிரம பரிஹாரம் மிகவும் அவசியமல்லவா? அது போலவே, குழந்தையின் ...ரப்பைக்கு சிறிது விடாய் தீர இடங் ...டுக்கவேண்டும். அவ்விதம் ஓய்ந்திருக்கும் ஸமயத்தில், ஜாடராக்னி அல்லது ஆமாசய நீர் (Gastric juice) சுரப்பதற்கு அதிலும் முக்கியமாய் பாசகாக்னியின் ஸம்பந்தமான அம்லம் (Hydrochloric acid) மேன்மேலும் விருத்தியாய், அடுத்த வேளையில் வரப்போகும் உணவை ஜீர்ணம் செய்வதற்குத் தயாராயிருக்கவேண்டி வருகிறது. அவ்வளவு) சிறிய சிசுவின் வயிற்றிலுள் ஜீர்ணமாகாமலும், அதிகமாய் புளித்தும்போன அவ்வளவு பால் தங்கியிருக்கும்போது, குழந்தை வயிற்று நோயால் மிகவும் வருந்துகிறதென்றால் அது ஒரு ஆச்சரியமா? குழந்தைக்கு ஒரு முறை பாலூட்டின பிறகு குறைந்தது இரண்டு மணிநேரம் கழித்துதான் மறுபடியும் பால்போடவேண்டும். வயது செல்லச்செல்ல உணவூட்டும் நேரத்தையும் இரண்டுமணிக்கு ஒருமுறையிலிருந்து மூன்று அல்லது நாலுமணிக்கு ஒரு முறையாக சிறுகச் சிறுக மாற்றிவரவேண்டும். இதற்குள் குழந்தைக்கு தாஹமுண்டானதாகத் தெரிந்தால், இளஞ்சூடான சுத்த ஜலத்தைத் தவிர வேறொன்றும் போட்டக் கூடாது. அதிலும் ½ முதல் 1-பாலாடை ஜலம் கொடுக்கலாம். இவ்விதம் உற்ற நேரங்களில் மட்டும் தகுந்த அளவில் பாலூட்டி வந்தால் அஜீர்ண வயிற்றுவலி உண்டாவதற்கு வழியில்லை.

குழந்தைக்கு வயிற்றுநோய் உண்டாவதற்கு மற்றொரு காரணம் தாய்க்கு நேரிடும் மலபந்தமே. குழந்தையைப் பெற்ற தாய்மார்களுக்கு வெகுவாய் மலபந்தமுண்டாவதும், அவர்கள் அதை ஒரு கெடுதலாக நினையாமல் அடிக்கடி அலக்ஷியம் செய்துவருவதும் ஸாதாரணம். ஸ்த்ரீகளுக்கு மலச்சிக்கல் அற்பமாக அல்லது அதிகமாயிருந்தபோதிலும், அவர்கள் பெரும்பாலும் அதை வெளியிடுவதில்லை. குடலில் பழையமலங்கள் சேர்ந்திருப்பதால் அந்த மலத்திலுள்ள தோஷங்கள் குடலிலிருந்து இரத்தத்தில் ஊறி, அதன் மூலமாய் கிரமமாக முலைப்பாலிலும் ஸம்பந்திக்கும். அந்த முலைப்பால் குழந்தைக்குக் கெடுதி செய்யக்கூடிய விதமாய் கெட்டுப்போய் விடுகிறது.

இவ்விதமான கேஸ் ஒன்று சிலமாதங்களுக்கு முன் நமதிடம் வந்திருக்கையில், தகுந்தவாறு பரீக்ஷைகள் செய்து குழந்தைக்கு உணவூட்டப்படும் நேரங்களை ஒழுங்கு படுத்து

வதில் ஜாக்கிரதையாயிருக்க ஏற்பாடு செய்ததால், குழந்தைக்கு கஷ்டம் நீங்கி அழுகையும் ஒருவாறு அடங்கிற்று. ஆகிலும், சில ஸமயம் காலை வயிற்றுப்பக்கமாக மடக்கிக்கொண்டு முகச்சுழிப்புடன் அழுவதைக் கண்டு, அதற்கு வயிற்றுநோய் முற்றிலும் குணமாகவில்லையென்று அறிந்து காரணம் ஆலோசிக்கப்பட்டது. தாய்க்கு வேண்டியவளவு பாலும் இருந்தது. ஆனால், இரண்டு மூன்றுநாள் தாயைப் பாலூட்டாமலிருக்கச் செய்து ஒரு தாதியைக்கொண்டு பால் கொடுக்கச் சொன்னதில் குழந்தையின் தேஹநிலைமை தெளிவுகொண்டதால், குழந்தையினுடைய தாயின் பாலில் தோஷம் இருக்கவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது. மற்ற விதத்தில் அவளுக்கு வேறொரு ரோகமுமில்லை. ஆனால், அவளுக்கு மலச்சிக்கல் வெகு நாட்களாய் உண்டென்று தெரியவந்தது. உடனே சிவதைவேர் கஷாயமும் விளக்கெண்ணெயுங் கலந்து உட்கொள்ளும்படி சொன்னேம். உபயோகிக்கும் கிரமமாவது:--சிவதை வேர் 1-பலம் இடித்துப்போட்டு ½ படி ஜலஞ்சேர்த்து ½ ஆழாக்காகக் காய்ச்சி வடிக்கட்டி ஒரு பலம் விளக்கெண்ணெய் சேர்த்து காலையில் உட்கொள்ள வேணும். இதில் ½ பலம் இந்துப்பு வேண்டுமானால் சேர்த்து உபயோகிக்கலாம். மேற்படி ஸ்த்ரீக்கு இவ்விதம் செய்ததில் பழைய மலங்களெல்லாம் குடலிலிருந்து கழிந்துவிட்டன. இந்துப்பு முதலிய சரக்குகள் குடலை சுத்தம் செய்வதுடன் யக்ருத் என்கிற கல்லீரலையும் தூண்டி பித்தநீரை அதிகமாகச் சுரப்பித்து, அதன் மூலமாகவும் வயிற்றிலுள்ள அழுக்குகளை ஒருவாறு அப்புறப்படுத்தும். இவ்விதமே நாலைந்து தடவை வாரத்திற்கு ஒரு முறையாக விரேசனத்திற்குக் கொடுத்ததில் மலபந்தம் ஒருவாறு ஒழிந்து, குழந்தையும் அவளுடைய மு[illegible]யாலால் ஸௌக்யமடைந்து வந்தது.

LADY AMPTHILL NURSING INSTITUTE.

லேடி ஆம்ப்தில் நர்ஸிங் இன்ஸ்டிட்யூட்.

சென்னையில் சில கனவான்கள் சேர்ந்து ஒரு ஸங்கம் ஏற்படுத்தி இப்பெயர்கொண்ட ஒரு உப[illegible]லை சாலையை ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த ஸங்கத்[illegible]ர், ரோகிகளுக்கு வைத்தியர்கள் சொல்லும் உபாயங்[illegible] அனுஸரித்து உபசாரம் செய்வதற்காகப் படித்த [illegible] அனுபவசாலிகளான சில தாதிகளை (Nurses) ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்த ஸங்கத்து மெம்பர்களால் செலுத்தப்படும் சந்தாத் தொகையிலிருந்து இ[illegible]தாதிகளுக்கு சம்பளங்கள் தகுந்தவாறு கொடுக்கப்படுகிறது. சென்ற நவம்பர் மீ 28உ கவர்ன்மெண்டு மாளிகையில் மேற்படி ஸங்கத்தாரின் வருஷாந்த மீடிங்கு [illegible] நடைபெற்றது. கனம்பொருந்திய லேடி பெ[illegible]லண்ட் அவர்கள் அப்பொழுது அக்கிராஸனம் வ[illegible]த்தார்கள். 1912-1913-ம் வருஷத்திய ரிபோர்ட்டின்[illegible] இந்த ஸங்கத்திற்கு வருமானம் விருத்தியாய் வ[illegible]வதாகத் தெரியவருகிறது. சென்ற வருஷத்தில் அங்கு வைத்திய ஸம்பந்தமாய் உபசரிக்கப் பட்டிருக்கிற பிணியாளிகளின் தொகை மொத்தம் 136. இதில் பிரஸவ ஸம்பந்தமாய் உபசரிக்கப்பட்டவர்கள் 34பேர். மற்ற ஸாதாரண வியாதி ஸம்பந்தமாய் உபசரிக்கப்பட்டவர்கள் 68. சஸ்திர சிகித்ஸைக்காக உபசரிக்கப்பட்டவர்கள் 32. சித்தப் பிரமைக்காக 2-பேர் உபசரிக்கப்பட்டார்கள். இந்த மாகாணம் முடிய அங்கங்கே அவசியமான இடங்களுக்கெல்லாம் அனுப்புவதற்குத் தகுந்தவாறு அவ்வளவு தாதிகள் இப்பொழுது இந்த ஸங்கத்தில் இல்லை. சென்ற வருஷம் ஆரம்பத்தில் 13-தாதிகள் இருந்தார்கள். இதில் 4-பேர் பிறகு இராஜீநாமா கொடுத்துவிட்டார்கள். மற்றொரு தாதி இராஜா பெற்றுக்கொண்டாள். ஆஸ்ட்ரேலியாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் இரண்டு தாதிகள் புதிதாக வரவழைக்கப்

பட்டிருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது 10-தாதிகள் வேலையில் இருக்கிறார்கள். இந்த ஸங்கத்திற்கு இப்பொழுது சாச்வத சந்தாதாரர்களாக 32-மெம்பர்களும், வருஷா வருஷம் சந்தா செலுத்துபவராய் 100-பேரும் இருக்கிறார்கள். மொத்தம் கூடிய 136 கேஸுகளில் 48 கேஸுகள்தான் சந்தாதார்களைச் சேர்ந்தவர்கள். மிச்சம் 88-பெயரும் சந்தாதார்களல்லாதவர்கள். இந்த தாதிகளில் சிலர் அங்கங்கே இருந்த பிணியாளிகளின் உபசரணைக்காக சென்ற வருஷத்தில் [illegible]சமண்டலம், கோடைக்கனல், கூனூர், பெங்க[illegible] ஊத்தூர்க்குடி, திருவாங்கூர், காக்கிநாடா முதலி[illegible]ங்களுக்குப் போகவேண்டியிருந்தது. ஒரு கே[illegible]க்காக ஒருத்தி வடக்கே மத்தியமாகாணத்தி[illegible]ள ஜபல்பூர் வரையில் செல்லவேண்டி நேரிட்[illegible]. சென்ற வருஷத்தில் வரும்படி அதற்கு முந்[illegible] வருஷத்தைவிட 518 ரூபாய் குறைவு. ஆனால் 1[illegible]0-1911ம் வருஷத்தில் வந்த வரும்படியை விட 19[illegible]-1912-வருஷத்தில் 1841 ரூபாய் அதிகமாய் வந்திருக்கிறது. 'லேடி மிண்டோ இண்டியன் நர்ஸிங் அஸோஸியேஷன்' என்கிற ஸங்கத்தாரிடமிருந்து உபகா[illegible]க சென்ற வருஷத்தில் 5000-ரூபாய் இந்த ஸங்[illegible]க் கிடைத்தது. இவ்வருஷக் கடைசியில் [illegible]ப்புத் தொகை ரூபாய் 5230. ஸாமர்த்திய[illegible]ளாய் அனுபவம்பெற்ற தாதிகளை வேண்டிய[illegible]நியமிக்க இந்த ஸங்கத்தார் தீர்மானித்திருக்கி[illegible]ன். இங்கிலாந்து ஸ்காட்லாந்து முதலான இடங்[illegible]ருந்து நல்ல பயிற்சி பெற்ற தாதிகளை வரவழைக்க ப்ரயத்தனப்பட்டுவருகிறார்கள்.

A LETTER ABOUT CHOLERA

FROM

Dr. J. V. RAMASWAMI NAIDU, L.M. & S.,

விஷூசியைப்பற்றி ஒரு கடிதம்.

ஜகந்நாதத்தில் 1912-ம் வருஷ இரதோத்ஸவத்திற்கு வந்திருந்த யாத்திரைக்காரர்களில் அனேகருக்கு விஷூசி கண்டது. அப்பொழுது அங்கு அதற்கென்று ஏற்படுத்தியிருந்த காலரா ஆஸ்பத்திரியில் 417 கேஸுகள் சிகித்சை செய்யப்பட்டன. அவர்களில் ஒருவன் ஸ்வஸ்தமாய்விட்டதாகக் கண்டு ஜூலை மீ 6வ ஆஸ்பத்திரியிலிருந்து வெளியில் அனுப்பப்பட்டான். பிறகு ஜூலை மீ 23வ இவனை ஏதோ ஒரு குற்றத்திற்காகப் பிடித்து விசாரணையாகாத கைதிகளை வைத்திருந்த ஓர் அறையில் காவலில் வைத்தார்கள். இவன் ஜெயிலுக்கு வந்த சில நாட்களுக்குப்பின் இவனோடுகூட இருந்தவர்களில் சிலருக்கு விஷூசி கண்டது. இதற்குக் காரணம் என்னென்று ஆலோசித்து, முன் விஷூசி கண்டுத் தேறிய மனிதனின் மலத்தைப் பரிசோதித்ததில், அவனுடைய மலத்தில் விஷூசி ஸம்பந்தமான ஸூக்ஷ்மஜீவன்கள் இருந்தனவென்று மேஜர் E. D. W. கைக், M. D. என்பவர் கண்டு பிடித்தார். அவர், பிறகு மேற்படி மனிதனுக்குத் தனியாக வேறோரிடம் ஏற்படுத்தியதுடன், வேறு சில முயற்சிகளும் செய்து விஷூசியை அடக்கினார். அந்த மனிதனுடைய மலத்தை ஆகஸ்டு மீ 4வ வரையில் பரீக்ஷித்து வந்ததில் விஷூசி ஸம்பந்தமான ஸூக்ஷ்மஜீவன்கள் இருந்துகொண்டே வந்தன. பின்னிட்டு, அவன் ஜெயிலிலிருந்து விடுவிக்கப்பட்டதால், அவனுடைய மலத்தை அதற்குமேல் பரிசோதிக்க இயலாமற் போயிற்று. இதனால், விஷூசி வியாதிக்குண்டான துர்க்குணங்களெல்லாம் நீங்கிய பிறகு கூட அம்மனிதனுடைய சரீரத்தில் விஷூசிக்குக் காரணமான ஜீவாணுக்கள் ஜீவித்திருக்கலாமென்றும், அவ்வியாதியிலிருந்து ஸ்வஸ்தமான அம்மனிதனிடமிருந்து ஒரு மாதத்திற்குப் பின்னும் விஷூசியானது மற்றவரிடம் பரவக்கூடுமென்றும் தெரியவருகிறது. * இவ்விதமாக மேற்படி டாக்டர் கூறுகிறார். (இண்டியன் ஜர்னல் ஆப் மெடிகல் ரிஸெர்ச்-Indian Journal of Medical Research.)

---

* சில தொற்று வியாதிகளை யுண்டுபண்ணும் ஜீவாணுக்கள் முதலில் ஒருவனிடம் பற்றிக்கொண்டு வியாதியை யுண்டாக்கிய பின் அவன் ஏதோ ஒரு விதத்தில் ஸ்வஸ்த்தமாய்விட்டால், பிறகு அவனுடைய உடம்பில் அந்த விஷ பரமாணுக்கள் ஸம்பந்தித்திருந்தாலும், அவற்றால் அம்மனிதனுக்கு ஏதும் தீங்கு நேரிடுவதில்லை; ஏனெனில், அவ்வித விஷங்களைத் தாங்குவது அவனுக்கு ஸஹஜமாய்விடுகிறது. வைசூரிகை அல்லது அம்மை முதலியவை ஒரு மனிதனுக்கு ஒருமுறை வந்தால் மீண்டும் வாராதிருப்பதற்கும் காரணம் இதுவே. இவ்விதம் விஷப்பொருள் ஸஹஜமாய் விடுந்தன்மைக்கு 'ஸாத்மியம்' எனப் பெயர்.

THE USE AND ABUSE OF COFFEE.

காப்பியின் உபயோகமும் கெடுதியும்.

மெடிகல் டைம்ஸ் என்கிற வைத்திய பத்திரிகையானது இவ்விஷயத்தைப்பற்றி அடியில் வருமாறு கூறுகிறது:—

காப்பியைப்பற்றி ஸமீபத்தில் பலவித பரிசோதனைகள் செய்து பார்த்ததில், ஆரோக்கியநிலைமையிலுள்ளவர் இதை மிதமாக இரண்டொருவேளை உட்கொண்டால், அவர்களுடைய சரீரதாதுக்களின்செயல்களுக்காவது தன்மைகளுக்காவது தற்காலம் இதனால் கெடுதியுண்டாவதாகத் தெரியவில்லை. வாதஸம்பந்தமானவீக்கம் அல்லது நோயுள்ளவரும்(Neurasthenic), அஜீர்ண ரோகிகளும் இதைப் பானம் செய்வதுமட்டும் மிகவும் பிசகு. ஆனால் சில ரோகிகள் கவலைக்கிடமான நிலைமையிலிருக்கையில் அவர்கள் இதை மிதமிஞ்சி உபயோகித்தும், இதற்குண்டான விஷத்தன்மையினால் அவர்களுக்குப் பிராணபாயம் நேரிடவில்லையென்று சிலர் கூறுகின்றனர். காப்பியானது மிதமாக உஷ்ணத்தை அதிகப்படுத்தக்கூடிய உத்ஸாஹகாரியானாலும் (Stimulant), அதனால் ஏற்படும் அவ்வித செயலானது நீடித்துத் தொடரக்கூடியதாயில்லையென்பது வாஸ்தவம். காப்பியைத் தகுந்த அளவில் உபயோகித்து வந்தால் திடசரீரமுள்ளவன் பிணியாளியாக ஆகமாட்டான். தூக்கக் குறைவு, தலைவலி, வாதரோகம், ஹ்ருதயம் இயற்கைக்கு மாறாகத் துடிப்பது (Palpitation of the heart), அஜீர்ணம், தலைச்சுற்றல் இவைகளால் வருந்தும் பிணியாளிகளுக்கு மட்டும் காப்பியானது சிறிய அளவிலும் தீங்கு செய்யக்கூடும். ஆனால் இது அதிக வேலை செய்பவருக்கு உண்டாகும் களைப்பை அடியோடு அகற்றுவதற்கு அல்லது குறைப்பதற்குத் தகுந்த ஸாதனமாயிருக்கின்றது. காப்பிக்கு இவ்வித குணம் ஒன்று இருப்பதைப்பற்றி அதைப் புகழுவதற்குப் பதிலாய் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது; ஏனெனில், இதனால் உண்டாகும் வேறு சில தீங்குகளை கவனியாமல் கேவலம் சிரமஹரம் (Emolliant) என்கிற காரணத்தைக் கொண்டு சில வேலைக்காரர்கள் களைப்பு உண்டாகும்பொழுதெல்லாம் அடிக்கடி இதை அளவின்றி குடித்துவிட்டு அனியாயமாய் மிதமிஞ்சி வெகு நீடித்த நேரம் உழைத்து உடலையும் மனதையும் கெடுத்துக் கொள்கின்றனர். இவ்விதம் காப்பியைக் கு[illegible]தும் அதற்குமேல் அளவுமீறி வேலை செய்வது [illegible]யுள் க்ஷீணிப்பதற்குக் காரணமாகுமென்று நாம் [illegible]ய மறிந்து உபதேசிப்பதை நேயர்கள் கருத்துட[illegible]சவனிப்பாராக. வீக்கம் முதலிய உபத்திரவங்க[illegible] கூடிய வாதரோகத்திலும், அஜீர்ண ரோகத்[illegible] இதை உபயோகித்தால் அவர்களுடைய சரீரத[illegible]க்களில் ஸம்பவிக்கும் சில கெடுதலான மாறுபாடு[illegible] நுண்ணறிவுள்ள வைத்திய சிரேஷ்டர்கள் [illegible]பக்கூடும். அப்பிணியாளிகளின் சரீரத்தில் சிறிய அளவான காப்பியும் பெரிய அளவுபோலவே வேலை செய்யும். நாகரிகமாக ஜீவனம் செய்பவர் காப்பி குடி[illegible] அவசியமென்று நாம் நினைக்கவில்லை. இன[illegible] நிர்ப்பந்தமாக உபயோகித்து வருவதை [illegible] கால், அவர்கள் வீண் செலவைப் பாராட்[illegible] களாய் அனாவசியமான ஸுகாநுபவத்தை (Lu[illegible] விரும்பி அவ்விதம் செய்கிறார்களென்று நாம் க[illegible] கின்றோம். சிறிய அளவில் உபயோகிப்பதை[illegible]லமென்று நாம் சொல்லத் துணியோம். வியாபாரத்தின் நிமித்தம் சிறந்த குணமுள்ளதென்று விளம்பரங்கள் செய்யப்படும். ஆனால் தத்துவ மறிந்த வைத்தியர்களின் கொள்கை இதில் வேறுவிதமானது.

DRUGS AND MEDICINES.

ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

மாதளை.

இந்தியாவில் மாதளை எங்கும் பிரவிர்த்தமானது. இச்செடியினுடைய வேரின்பட்டை, பழத்தின் மேல் தோல் இவ்விரண்டையும் விசேஷமாய் ஔஷத முறைகளில் உபயோகிக்கும்படி தற்காலத்திய வைத்தியர்களும் சொல்லுகிறார்கள். பிராசீன ஆயுர்வேத நூல்களில் மாதளங்கொழுந்து, பூ, பழத்தின் ரஸம் இவைகளையும் ஔஷதமுறைகளில் உபயோகிக்க பிரமாணங்கள் இருக்கின்றன.

இதன் செய்கை அல்லது குணங்கள்:—மாதளம்

வேர்ப்பட்டைக்கு க்ருமிக்னம், தாதுக்ஷயக்னம் என்கிற செய்கைகளும், பழத்தினுடைய தோலுக்கு ஸ்தம்பகம், க்ராஹி என்கிற குணங்களும் உண்டு. மாதளம் பிஞ்சு, தளிர் இவைகளில் தோலுக்குண்டான குணங்கள் சிறிது குறைவாயிருக்கின்றன. பழத்தின் இரஸத்திற்கு தாஹப்ரசமனம் (Antiphlogistic), சர்தித்நிக்ரஹம், அபிஷ்யந்தி(Demulcent), திருஷ்ணாநிக்ரஹம் என்கிற குணங்கள் உண்டு. (இங்கு புளிப்பு மாதளையே கிரஹிக்கப்படுவதாய் அறிக.)

முறைகள்:—(1) மாதளம் பட்டைக் கஷாயம்:— ஒரு பழகிய மட்பாத்திரத்தில் ½ படி ஜலம் சேர்த்து அதில் 3-பலம் மாதளம் பழத்தோலையும் 2-தோலா கிராம்பையும் சிதைத்துச் சேர்த்து 20 நிமிஷம் வரையில் கொதிக்கவைத்து வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். இது ஆறிய பிறகு ஒரு அவுன்ஸ் முதல் இரண்டு அவுன்ஸ் வரையில் வயதுக்குத் தக்க படி தின திற்கு மூன்று வேளை கொடுத்தால் அதிஸாரமும், முதிர்ந்துபோன வயிற்றுக்கடுப்பும் குணமாகும். இதில் சீக்கிரம் குணம் தெரியாத பக்ஷத்தில் வா நக்கு ஒரு நெல்லெடை அபினியை கஷாயத் துட கலந்து உபயோகிக்க நல்ல குணந்தரும். இ ளுக்கு உண்டாகும் அதிஸாரம் அல்லது அஜீ பேதியைப் போக்குவதற்கு இக்கஷாயம் மிக முக் னதென்று கருதப்படுகிறது. வாயிலும், பல் களிலும் புண் உண்டாயிருந்தாலும், இரத்தம் வடிந்தாலும் அபினிமுதலியவைகளைக் கலக்காமல் மேற்படி கஷாயத்தைக்கொண்டு அடிக்கடி வாய்க்கொப்புளிக்கலாம்; வாய்க்கொப்புளிக்கும் கஷாயத்தில் ஒரு ஆழாக்குக்கு ஒரு தோலா விதம் படிக்காரத்தூள் சேர்ப்பது உத்தமம். ஸ்த்ரீகளுக்குண்டாகும் பெரும்பாடு முதலிய ரோகங்களில் கர்ப்பாசய மார்க்கத்தை மேற்கூறிய கஷாயத்தினால் கழுவ நற்குணமுண்டாகும். (2) நன்றாக உலர்ந்த மாதளம் வேர்ப்பட்டை [illegible] தோலா, வாய் விடங்கம் 1 தோலா இரண்டையும் சேர்த்து சூர்ணம் செய்து, இதில் வேளைக்கு 10 நெல்லெடை விதம் தினத்திற்கு நாலைந்து வேளை உட்கொண்டால், இது வயிற்றிலுள்ள நாடா போன்ற பூச்சிகளைக் கொன்றுவிடும்; மறுநாள் காலையில் ஆமணக்கெண்ணெயை விரேசனத்திற்காக உட்கொள்ளவேண்டும். (3) மாதளம் வேர்ப்பட்டை 8 தோலா எடுத்து, ½ படி ஜலத்தில் போட்டு, ½ மணிநேரம் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 2-அவுன்ஸ் விதம் ஒரு நாளைக்கு ஐந்தாறு வேளை கொடுக்கலாம்; உடனே பேதிக்கு விளக்கெண்ணெயைக் கொடுக்க வேண்டும். முற்கூறிய சூர்ணத்தையாவது கஷாயத்தையாவது முதல் தடவை ஆஹாரம் எடுத்துக்கொள்ளாமலிருக்கையில் கொடுக்க வேண்டும். இந்த மருந்துகள் ஸாதாரணமாய் 12-மணி நேரத்திற்குள் நாகப்பூச்சிகளைக் கொன்று வெளிப்படுத்தும். வைத்தியர்கள் இதை சீக்கிரத்தில் கெட்டுப்போகாத விதமாய் கஷாயமாகவோ, சூர்ணமாகவோ தயார் செய்து வைத்துக்கொள்வது நலம். (4) மாதளம்பூவை நிழலில் உலர்த்தியெடுத்துத் தேனில் ஊறவைத்து குல்கந்து மாதிரியாக பக்குவம் செய்து, அதில் வேளைக்கு 1-அல்லது 2-தோலா அளவு சாப்பிட்டு வந்தால் அர்சஸ் என்கிற இரத்தமூலம், இரத்தபேதி, வாந்தி முதலியவை நீங்குவதுடன் சரீரத்திற்கு பலமும் உண்டாகும். (5) தாடிமாஷ்டக சூர்ணம்: உலர்ந்த மாதளம் பழத் தோல் 8 பலம், மூங்கிலுப்பு ¼ பலம், குராஸானி ஓமம், கிரந்திதகரம், த்ரிகடு* இவை வகைக்கு ஒவ்வொரு பலம் சேர்த்து சூர்ணம் செய்து 8-பலம் சர்க்கரையும் சேர்த்து வேளைக்கு 6-தோலா விதம் தினத்திற்கு மூன்று தரம் சாப்பிட்டு வந்தால் அதிஸாரம், க்ரஹணி, தொண்டைப்புண், அரோசகம் இவை நீங்கும். (6) தாடிமபுடபாகம்: நன்றாகக் கனிந்த மாதளம்பழத்தின்மேல், கோதுமைமாவில் நனைத்த சல்லாத்துணியினால் ஐந்து சீலை செய்து, சீலைகள் சிறிது உலர்ந்தவுடன், அடுப்பிலிட்டு மேலிருக்கும் சீலைகள் அக்னிவர்ணமாக இருக்கையில் எடுத்து, வெந்துபோன மேல் பாகங்களை விலக்கி, உள்ளேயிருக்கும் குழம்பிய பாகத்தைப் பிழிந்து வடிக்கட்டிக்கொண்டு, அதில் பொரித்த வெண்காரத்தில் ½ தோலா சேர்த்து உட்கொள்ளவும். இதனால் அதிஸாரமும், சீதபேதியும் நின்றுவிடும். (7) தாடிமாவலேஹம்: மாதளம் பழரஸம் 1-படி, சர்க்கரை 16 பலம் இவ்விரண்டையும் சேர்த்துக் காய்ச்சவும்; கொதிக்க ஆரம்பிக்கையில் சுக்கு, மோடி, திப்பிலி, கொத்தமல்லி விதை, ஜீரகம், ஜாதிக்காய், ஜாப்த்திரி, மிளகு, மூங்கிலுப்பு, இலவப்பிசின், வட்டத்திரிப்பி, கிராம்பு,

* சுக்கு, திப்பிலி, மிளகு இம்மூன்றுக்கும் 'த்ரிகடு' என்று பெயர்.

அதிவிடயம் இவற்றில் வகை ஒன்றுக்கு ஒவ்வொரு பலம் சேர்த்து நன்கு சூர்ணம் செய்து மேற்படி இரஸத்தில் சேர்த்துவிடவேண்டும்; பிறகு நெய் 12-பலம் சேர்த்து பாகுபோல் வரும் ஸமயத்தில் தேன் 12-பலம் விட்டு இறக்கிவிடவேண்டியது. இதை ஒரு கற்சட்டி அல்லது பீங்கான் பாத்திரத்தில் எடுத்து நன்றாக மூடி போட்டு வைத்துக்கொள்ளவேண்டும். இதில் வேளைக்கு ½-பலம் விதம் 3 வேளை சாப்பிடலாம். இதனால் பித்தஜ்வரம், ஜ்வரத்துடன் கூடிய அதிஸாரம் இவைகள் குணமாகும். நாவறட்சியைத் தணிப்பதற்கு இந்த லேஹ்யம் மிக உபயோகமாயிருக்கும். அஜீர்ணத்தையும், அரோசகத்தையும் போக்குவதற்கு இது சிறந்த ஔஷதமாம். (யோகரத்நாகரம்.)

படர் தேமலைப் போக்க சவுட்டுப்பு. டாக்டர் நாக் என்பவர் இதைப்பற்றி ஒரு விசேஷம் கூறுகிறார். மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமில்லாமல் தான் செய்யும் காரியங்களை யெல்லாம் உள்ளபடியே கூறுபவளும், ஆனால் உலகவிவஹாரத்தில் சிறிதும் பழக்கமற்றவளுமான ஒரு ஸ்திரீயின் மூலமாய் அருமையான இவ்விஷயம் கண்டறியப்பட்டது. அடியில் குறிப்பிடப்படும் முறையைக்கொண்டு படையில் குணமுண்டாகும்படி செய்வதற்கு எவருக்கும் இரண்டு தடவைக்குமேல் உபயோகிக்கவேண்டிய அவசியம் நேரிடவில்லையாம். ஒரு கொட்டைப்பாக்களவு சவுட்டுப்புத் துண்டு (house hold Washing soda) ஒன்று எடுத்து, நன்கு பழுக்கக் காய்ச்சிய ஒரு இரும்பின்மேல் அதை வைத்தெடுத்து (நாக் என்பவர் ரோகிகளைப் பரீக்ஷிக்கும் தனது அறையிலுள்ள ஒரு விளக்கில் காய்ச்சுவது வழக்கமாம்), அதன் உருகிய முனையினால் படர் தேமல் இருக்குமிடத்தைக் கூச்சமின்றி நன்றாகத் தேய்க்கவேண்டும். தலையில் படையிருந்தால், படையிருக்கும் இடங்களைச் சுற்றிலுமுள்ள மயிர்களை யெல்லாம் அடியோடு கத்தரித்து, பிறகு சிறிது சூடான சவுட்டுப்பினால் அழுத்தமாக ஒரு முறைக்குப் பலமுறையாய்த் தேய்த்துவிடவேண்டும். சரீரத்தில் ஸாதாரணமான இடங்களில் இதை ஒரு தடவை உபயோகித்தால் அதனாலேயே படையெல்லாம் உதிர்ந்துவிடும்; ஆனால் மயிருள்ள தலைபோன்ற அவயவங்களில் ஆறு அல்லது ஏழு நாட்களுக்கு ஒருதரம் போடுவது நலம். ஸாதாரணமாய் இதற்கு மேல் சட்டு கட்டவேண்டி[illegible] அவசியமில்லை; ஒரு வேளை சிரங்கும் புண்ணும[illegible]ருந்தால் போரிக் ஆஸிட் கலந்த களிம்பு வேண்டுமானால் மேலே தடவலாம். படர் தேமலுக்கு இவ்வித[illegible]வுட்டுப்பை உபயோகிப்பது மிகவும் எளிதா[illegible]டன், அதிக செலவின்றியும் அனைவரும் செ[illegible]ளக் கூடியதாயிருக்கின்றது. (ப்ரிட்டிஷ் [illegible]கல் ஜர்னல்—The British medical Journal.)

NOTES AND ITEMS OF INTEREST.

பலவகைக் குறிப்புகள்.

சுளுக்குக்கு உஷ்ணஜலம்.

டாண்டோரோ விஜ் என்பவர் அடியில் வருமாறு எழுதுகிறார்:—சுளுக்கு உண்டான இடத்தில் தொடர்ந்து உஷ்ண ஜலத்தை விட்டால் நல்ல குணம் காணப்படுவதாய் பத்து வருஷகாலமாக எனது அனுபவத்தில் வந்திருக்கிறது. சுளுக்குகள் உண்டானதும், ஸந்திகளைக் கட்டுவதற்கேற்ற உறுதியான ஜவ்வுகள் (Ligaments) சிறிது சிதைந்தோ அல்லது வேறு விதமாகவோ கோளாறடைவதும், அதனால் இரத்தமோ நிணநீரோ அதனதன் குழாயிலிருந்து இதர தாதுக்களின்மேல் பொசிவதும், அதன்மேல் அவ்விடங்களில் வீக்கம் உண்டாவதும் இயல்பு. எப்பொழுது சுளுக்கு உண்டாயிற்றோ அந்த க்ஷணமே, தாங்கக் கூடியமட்டிலும் அவ்வளவு அதிகமான சூடுள்ள ஜலத்தில் அவ்வவயவத்தை அமர்த்தி வைத்துக்கொண்டு, சூடு ஆறாமலிருப்பதற்காக 5-நிமிஷத்திற்கு ஒருதரம் வேண்டிய அளவு சூடான ஜலத்தை மேன்மேலும் ஊற்றிவரவேண்டும். இவ்விதம் ½-மணி அவகாசம் செய்வது நலம். இவ்வாறு செய்தபின், அந்த ஸந்திபந்தம் நோயில்லாமல் வெகு ஸுகமாக அசைவதைக் கண்டு அம்மனிதன் மிகவும் களிப்புறுவான். ஆகிலும் பூட்டுகளை இணைத்துக் கட்டும் ஜவ்வுகளில் ஏதேனும்

ஒன்றிரண்டு சிறிது சிதைவுறுவதால் ஏற்படும் ஸாதாரணமான சுளுக்குகளில் இவ்வித சிகிச்சையினால் நன்றாக குணம் தெரியுமேயன்றி, எலும்பானது ஏதாவது [illegible] சிறிது உடைந்திருந்து, அவ்விடத்தில் உஷ்ண ஜலத்தை முன் சொன்ன விதமாய் ஊற்றினால், வலியும் வீக்கமும் அதிகமாய்விடும். சுளுக்குக்கு உஷ்ண [illegible]தத் தொடர்ந்து ஊற்று[illegible] உத்த[illegible]யென்றாலும், ஸாதாரண [illegible]கள் [illegible], எலும்புகள் சிதறுண்டு போவதிலும் [illegible]ண்டாகும் குணம் ஒன்றுக்கொன்று முற்றி[illegible]பாஸப்பட்டதென்பதை நினைவில் வைத்[illegible]ண்டும். கண்ணாடிப் பெட்டியிலடங்கிய [illegible]ப்போல் சரீரத்தினுள்ளிருக்கும் எலும்பு [illegible] முறை வெளியிலிருந்து ஒருவாறு காட்டு[illegible] ரண்ட்ஜன் என்னும் கருவியை [illegible] (Rontgen) ஸாதாரண சுளுக்கா, எலு[illegible]யா என்று வைத்தியர்கள் விவரம் அறிந்து [illegible]ம். (நியூயார்க் மெடிகல் ஜானல்—New [illegible]dical Journal.)

[illegible]வைத்திய ரத்னம் என்கிற பிருது.

[illegible]நூதனம் இராஜப்ரதிநிதியவர்களால் புது [illegible]வருஷப்பட்டங்கள் அவரவருக்கு அளிக்கப் [illegible] மலையாளத்தில் ஆயுர்வேத முறைப்படி [illegible]ம் செய்துவரும் ஸ்ரீமான் டி. தாமோதரன் அவர்களுக்கு 'வைத்தியரத்ன' என்கிற [illegible] அளிக்கப்பட்டதைப்பற்றி நாம் ஸந்தோஷப்[illegible]கிறோம். மேலும் நாம் இதைப்பற்றி ஸந்[illegible]ப்படுவதற்கு மற்றொரு முக்கியமான காரணம் [illegible]வனில், இப்பொழுது வைத்தியப் [illegible]ன்படி ஆயுர்வேத யூனானி வைத்தி[illegible]யத் தகாதவர்கள் என்று ஹானரபிள் [illegible] நாயர் முதலானவர்கள் சொல்வது ஒரு [illegible]க்கம் மற்றொரு பக்கத்தில் இராஜாங்கத்தாரால் [illegible]வத வைத்தியர்களிலும் திறமைசாலிகளான [illegible] ஒரு கண்ணால் பார்க்கப்பட்டு ஸமயங் [illegible] கௌரவிக்கப் படுகிறார்களென்பதே.

சென்னையில் ஒரு யூனானி பாடசாலை.

சென்ற டிசம்பர் மாதம் 13-ம் ௳ திருவல்லிக்கேணியில் கான் பஹதூர் முகம்மத் அப்துல் குதூஸ் பாஷா ஸாஹிப் அவர்களால் ஒரு யூனானி பாடசாலை ஏற்படுத்தப்பட்டது. அந்த பாடசாலையை ஹானரபிள் நவாப் ஸையத் முகம்மத் பகதூர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அப்பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தும் சடங்குக்கு அநேக ஹிந்துக் கனவான்களும் முகம்மதிய கனவான்களும் வந்திருந்தார்கள். சென்னையில் இரண்டு ஆயுர்வேத கலாசாலைகளும் ஆயுர்வேத தர்ம வைத்தியசாலைகளுமே சிலவருஷங்களாய் வேலை செய்து வருகின்றன. யூனானிவைத்திய முறையைக் கற்பிக்க இவ்விதமாக ஒரு பாடசாலை ஏற்படாமலிருந்தது அவ்வைத்தியத்திற்கு ஒரு குறைவாகவே இருந்து வந்தது. புதிதாக ஏற்பட்ட இந்த யூனானி பாடசாலை நன்கு செழித்தோங்க வேண்டுமாய்க் கோருகிறோம்.

கும்பகோணத்தில் ஒரு புதிய இந்திய வைத்திய ஸங்கம்.

கும்பகோணத்தில் ஆயுர்வேத வைத்தியர்களும், யூனானி வைத்தியர்களும் சேர்ந்து சென்ற மாதத்தில் 'இந்தியப் பிராசீன வைத்திய ஸங்கம்' என்று ஒரு வைத்திய ஸபையை ஏற்படுத்தி, அதன் மூலமாய் ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகளை விருத்தி செய்யவேண்டுமென்று நிச்சயித்து, அப்பொழுதே அந்த ஸங்கத்தார் சேர்ந்து ஒரு இந்திய வைத்திய பாடசாலையையும் ஏற்படுத்தினார்கள் என்றறிய நாம் மிகவும் களிப்புறுகின்றோம். இந்த ஸங்கத்தார் 'வைத்திய கலாநிதியை' ஆதரித்து இதிலுள்ள மெம்பர்களெல்லாம் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேருவதாக வாக்குறுதி செய்ததற்கு நாம் மனதார நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வித காரியங்களில் முயற்சியெடுத்துக் கொண்டதற்காக அவ்வூரில் பிரபல வைத்தியரான மிஸ்டர் K. S. துரைஸ்வாமி பண்டிதர் அவர்களை நாம் புகழாமலிருக்கக் கூடவில்லை.

ஜண்டு பட்ஜீயின் ஆயுர்வேத ஔஷதங்கள்.

'வைத்தியகலாநிதியின்' [illegible] பத்திரிகையினுடைய ஆரம்பத்திலேயே [illegible] வைத்திய சாலையில் அநேக ஆயுர்வேத ஔஷதங்[illegible] சாஸ்த்திய யந்திரங்களைக்கொண்டு [illegible] சுத்தமாகப் பக்குவம் பண்ணப்படுவதாகவும் [illegible] ஆயுர்வேத வைத்தியர்களெல்லோரும் அவ்வௌஷதங்களை [illegible] உபயோகித்துக் கொள்ளலாமென்று [illegible]கிறோம்.

அவ்வௌஷதங்களை நாம் இப்பொழுது நேரில் பார்த்ததில், சீமையிலிருந்து வரும் இங்கிலீஷ் மருந்துகளைப்போலவே பார்வைக்கு வெகு நேர்த்தியாக மாத்திரைகளாகவும், சூர்ணமாகவும், கஷாயமாகவும் தயார் செய்யப்பட்டிருப்பதுடன், ஒவ்வொரு ஔஷதத்தில் சேர்க்கப்பட்டுள்ள சரக்கு முதலியவைகளும் அந்தந்த புட்டிகளின்மேல் நன்கு குறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, அவை சாஸ்திர ரீதியாய்ப் பக்குவம் செய்யப்பட்டவையாக நம்பக்கூடியவையென்றும் தீர்மானித்தோம். மேலும் ஜண்டு என்டவர் வைத்திய சாஸ்திரத்தில் மிகவும் நிபுணரான மஹான் என்று வட இந்தியாவில் பெரும் புகழ் பெற்றவர். அவ்வௌஷதங்களை வைத்தியர்கள் வாங்கி உபயோகிப்பதால் ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் அவ்வைத்திய சாலையாருக்கும் பரஸ்பரம் நன்மையுண்டாகும்.

புஸ்தக வரவு

வைத்தியசாஸ்திர சதச்லோகீ. காஞ்சீபுரம் ஆயுர்வேத ஸபையின் மானேஜராகிய ஸ்ரீமான் P. B. இரங்காசாரியஸ்வாமியினால் மேற்படி புஸ்தகம் ஒன்று எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆயுர்வேத வைத்தியர்களால் கையாளப்பட்டுவரும் ஔஷதிகளின் விஷயங்களை யறிவிக்கும் ஸமஸ்கிருதக் கிரந்தங்களில் இதுவும் ஒன்று. இதில் ஆயுர்வேதக் கிரந்தங்களில் கூறப்படும் பெரும்பான்மையான ரோகங்களில் ஒவ்வொன்றையும் ஸ்வஸ்தம் செய்வதற்கு ஏற்ற ஔஷதச் சரக்குகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கிரந்தத்தின் பத்தியங்களையும் அவற்றிலடங்கிய பதங்களையும் தனித்தனியாக கிரந்தாக்ஷரத்திலும் தேவநாகரலிபியிலும் அச்சிட்டு, ஒவ்வொரு பதத்திற்கும் தமிழில் கிரமமாக பொருளும் எழுதப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் வைத்தியர்களுக்கும், ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஔஷதச் சரக்குகளின் பெயரை அறிய விரும்பும் தமிழ் மாணக்கருக்கும் உபயோகமாயிருக்கும். இப்புஸ்தகம் கிடைக்கும் இடம் முதலியவற்றைப்பற்றி வைத்திய கலாநிதியின் விளம்பரப் பகுதியில் பார்த்துக்கொள்க.

எல்லா இந்திய ஸுகாதார கான்பரென்ஸ்.

எல்லா இந்திய ஸுகாதார கான்பரென்ஸ் லக்நௌவில் இந்த ஜனவரி மாதம் [illegible]-ந் தேதியன்று தொடங்கிற்று. அந்த கான்பரென்ஸின் தலைமையை இந்தியா கவர்ன்மெண்ட் கல்வி மெம்பர் ஆனரெபில் ஸர் H. பட்லர் வகித்தார். அதற்குப் போன பிரதிநிதிகளின் தொகை பின் வருமாறு:—இந்தியா கவர்ன்மெண்டிலிருந்து 13, சென்னையிலிருந்து 13, பம்பாயிலிருந்து 15, வங்காளத்திலிருந்து 12, ஐக்கிய மாகாணங்களிலிருந்து 15, பஞ்சாப்பிலிருந்து 10, பேஹாரிலிருந்து 7, மத்திய மாகாணங்களிலிருந்து 5, அஸ்ஸாமிலிருந்து 5, பர்மாவிலிருந்து [illegible] வடமேற்கு எல்லை மாகாணத்திலிருந்து 2, [illegible]யிலிருந்து 3, [illegible] சிலோனிலிருந்து 4, ஹைதராபா[illegible]லிருந்து [illegible] மைசூரிலிருந்து 2, போர்ச்சகீஸ் இந்தி[illegible] இச்சென்னை மாகாணத்திலிருந்து அந்த கான்பரென்ஸுக்குப் போன இந்தியர்கள் [illegible] ராவ்பகதூர் M. ராமசந்திரராவும் ஆனரரி [illegible] டாக்டர் T. M. நாயரும் ஆவார்கள்.

அகில பாரத ஆயுர்வேத மஹாஸபை.

இந்தியாவிலுள்ள ஆயுர்வேத வைத்தியர்க[illegible]னவருடைய நன்மைகளையும் கோரி, ஒரு பெரிய வைத்திய ஸங்கம் சில வருஷங்களுக்கு முன் வட இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் மேற்படி ஸங்கத்திற்கு சில பிரமுகர்களான ஆயுர்வேத வைத்தியர்கள் காரிய நிர்வாஹகக் கமிட்டிக்கு மெம்பர்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பிரதிவருஷமும் இந்த ஸங்கத்தார் ஒரு பெரிய ஸபையைக் கூட்டி (Conference) வி[illegible] விசார[illegible] செய்து வருகிறார்கள். இவ்வருஷம் [illegible]பர் மாதம் 20, 21, 22, 23, 24 இந்த ஐந்து தினங்களிலும் வடக்கே மதுரா க்ஷேத்திரத்தில் [illegible] "அகில பாரத ஆயுர்வேத மஹா ஸபை" கூடிற்று. ஆயுர்வேத முறையை அபிவிருத்திக்குக் கொண்டுவரவேண்டிய விஷயங்களைப்பற்றி விசேஷ பிரஸங்கங்களும் விசாரணைகளும் நடந்தேறின. [illegible]ம் அந்த மஹாஸபைக்கு கர்னல் K. R. கீர்த்[illegible] S; E. F. S. etc. என்கிற மஹான் அக்கிராஸனம் வகித்தார். இவருக்கு ஆயுர்வேதத்தில் விசேஷ அபிமானம் உண்டென்று நாம் தனிப்பட சொல்லவேண்டிய அவசியமில்லை. இந்த மஹாஸபை நடந்தபோது [illegible] வைத்திய ஸம்பந்தமான வெகு சிறந்த பொருட்காட்சியும் நடந்தேறியது. ஆயுர்வேத வைத்திய விஷயமாக அங்கு நடைபெற்ற விஷய விசாரங்களும், பொருட்காட்சியும் மிகவும் புகழுக்குரியவை யென்று மேற்படி ஸபையோரிடமிருந்து எமக்குக் கடிதம் வந்திருக்கின்றது. இதைப்பற்றி அடுத்த முறை நாம் சிறிது விவரமா யெழுதுவோம்.